வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු

MARUTHI MONEY EXCHANGE
மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram மனிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 17.12.2024 செவ்வாய்க்கிழமை இதழ் : 351 பக்கங்கள் : 12

## மீனவர்கள் பிரச்னைக்கு மனிதாபிமானமாக தீர்வு!

### இந்தியா - இலங்கை கூட்டறிக்கை

புதுடில்லி, டிசெம்பர் 17

"மீனவர்கள் விவகாரத்தை மனிதாபிமான முறையில் தீர்க்க வேண்டியதன் அவசியத்தை பிரதமர் நரேந்திர மோடி - ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஆகியோர் ஒப்புக்கொண்டனர். ஆக்ரோஷமான நடத்தை அல்லது வன்முறையைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியத்தை அவர்கள் வலியுறுத்தினர்" என்று இந்தியா - இலங்கை கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய பிரதமர் நரேந்திர மோடியை, இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க சந்தித்து இரு தரப்பு பேச்சுவார்த்தை நடத்தியதை அடுத்து இரு நாடுகளுக்கும் இடையே பல்வேறு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி உள்ளன.

இதற்கான நிகழ்ச்சியில் பேசிய பிரதமர் நரேந்திர மோடி,

"இந்தியாவும் இலங்கையும் தங்கள் கூட்டாண்மையை விரிவுபடுத்துவதற்கான எதிர்கால நோக்கத்தை ஏற்றுக் கொண்டன. விரைவில் பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தத்தை முடிக்க முடிவு செய்துள்ளன.

11

## இலங்கையில் இன ஐக்கியத்துக்கு மாகாண சபைகள் மிக அவசியம்!

### அநுரவிடம் எடுத்துரைத்தது இந்தியா



புதுடில்லி, டிசெ. 17

இலங்கையில் இன ஐக்கிய மற்றும் உண்மையான நீதியை நிலைநாட்ட மாகாண சபைகள் இருப்பதன் அவசியத்தை எடுத்துரைத்துள்ள இந்திய பிரதமர் நரேந்திர மோடி, மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவிடம் வலியுறுத்தியுள்ளதாக இந்திய வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

11

## இந்தியாவின் தேசிய பாதுகாப்புக்கு பாதிப்பை ஏற்படுத்த அனுமதியேன்!

### ஜனாதிபதி அநுர மோடியிடம் உறுதி



புதுடில்லி, டிசெ. 17

இந்தியாவின் பாதுகாப்புக்கும் பிராந்தியத்தின் ஸ்திரத்தன்மைக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் இலங்கை மண்ணை பயன்படுத்த ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லையென ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இந்தியா சென்றுள்ள ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கும் இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கும் இடையிலான சந்திப்பு நேற்று பிற்பகல்

11

## ஜெய்சங்கர், நிர்மலா, டோவால் புதுடில்லியில் அநுரவுடன் பேச்சு

### முதலீட்டு வாய்ப்புக்கள் குறித்து ஆராய்வு

கொழும்பு, டிசெ. 17

இந்தியாவுக்கான மூன்று நாள் உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இந்திய மத்திய அமைச்சர்களை சந்தித்துள்ளார்.

அந்த வகையில் புதுடில்லியில் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன், வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர், மற்றும் இந்திய பாதுகாப்பு ஆலோச கர் அஜித் டோவால் ஆகியோர் ஜனாதிபதியுடன் கலந்துரையாடியுள்ளனர்.

இந்தியா - இலங்கை பொருளாதார

11



## அடுத்த வருடம் இரு தேர்தல்கள் இந்தியாவிடம் கூறினார் அநுர!

புதுடில்லி, டிசெ. 17

இந்தியா சென்றுள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நேற்று முன் தினம் இரவு இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்ஷங்கரைச் சந்தித்தபோது மாகாண சபைத் தேர்தல், உள்ளூராட்சித் தேர்தல் குறித்த நிலைப்பாட்டை அறிவித்ததுடன் அவை நடத்தப்படும் காலப் பகுதியையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

புதிய அரசியலமைப்பு வரும்வரை தமிழர்களுக்கு நிரந்தரமான அரசியல் தீர்வு எட்டப்படும்வரை மாகாண சபை முறைமை மாறாதென்றும் ஜனாதிபதி இந்தச் சந்திப்பில் உறுதியளித்துள்ளார். (அ)

## இலங்கை, இந்திய ரூபாயில் வர்த்தகம் மோடி - அநுரகுமார நேற்று ஆலோசனை

புதுடில்லி, டிசெ. 17

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் எதிர்காலத்தில் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது இலங்கை மற்றும் இந்திய ரூபாய்களை பயன்படுத்துவது குறித்து ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு இடையில் பேச்சுகள் நடத்தப்பட்டுள்ளன.

இந்தியாவுக்கு மூன்று நாள் அரசுமுறை பயணமாக சென்றுள்ள ஜனாதிபதி அநுரகுமார நேற்று திங்கட்கிழமை பிரதமர் மோடியை ஹைதராபாத் இல்லத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

11

## பஸ்ஸில் பயணித்த முதியவர் திடீரென சுகவீனமுற்று சாவு!

- பு.கஜிந்தன் -

யாழ்ப்பாணம், டிசெ. 17

தனியார் பஸ்ஸில் சுழிபுரத்தில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த பயணி ஒருவர் வாயிலிருந்து நுரை வெளிவந்த நிலையில் திடீரென உயிரிழந்துள்ளார். சுழிபுரம் மேற்கு, சுழிபுரம் பகுதியைச் சேர்ந்த இளையதம்பி சிவசுப்பிரமணியம் (வயது 71) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் நேற்று காலை 10.30 மணி அளவில் 782 வழித்தட பஸ்ஸில் சுழிபுரத்தில் இருந்து பயணத்தை மேற்கொண்டார். இதன்போது அவருக்கு இடை வழியில் வாயில் இருந்து நுரை வெளிவந்தது.

11

## 85 பேருக்கு எலிக் காய்ச்சல்!

யாழ்ப்பாணம், டிசெ. 17

யாழ்.மாவட்டத்தில் எலிக் காய்ச்சலினால் 85 பேர் இதுவரை பாதிக்கப்பட்டுள்ளனர் என யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த போதே இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போது பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் 21 பேரும் யாழ் போதனா வைத்தியசாலையில் 11 பேரும் இந்நோய்க்காக

11

## இலங்கை வருமாறு மோடிக்கு அழைப்பு

புதுடில்லி, டிசெ. 17

இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க அழைப்பு விடுத்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இந்தியா சென்றுள்ள ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கும் இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கும் இடையிலான சந்திப்பு நேற்று பிற்பகல் பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லமான ஹைதராபாத் மாளிகையில் நடைபெற்றது.

11

## வவுனியாவிலும் எலிக் காய்ச்சல்!

- குமார கோகுலன் -

வவுனியா, டிசெ. 17

வவுனியாவில் எலி காய்ச்சல் தொற்றுக்குள்ளாகி சிகிச்சை பெற்று வந்தவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு நேற்று மாற்றப்பட்டார்.

வவுனியா, தாலிக்குளம் பகுதியை சேர்ந்த நபர் ஒருவர் வவுனியா வைத்தியசாலையில் காய்ச்சல் காரணமாக அனுமதிக்கப்பட்டிருந்தார். எனினும் அவருக்கு காய்ச்சல் சுகமாகாமையால்

11



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பண்டோரா பேப்பர்ஸ் சர்ச்சை:

# சர்வதேச பொலிஸாரின் உதவியை நாடும் சி.ஐ.டி.

கொழும்பு, டிசெ. 17

பண்டோரா பேப்பர்ஸ் தகவல் வெளிப்படுத்தல் அறிக்கையில் இடம்பெற்றுள்ள இலங்கையர் குழுவின் சொத்துக்கள் தொடர்பில் விசாரணை நடத்த சர்வதேச பொலிஸாரின் உதவியை நாடவுள்ளதாக குற்றப் புலனாய்வு பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்படி, தேவையான ஆவணங்களை விரைவில் கொண்டு வருவதற்கு குற்றப் புலனாய்வுத் திணைக்களம் ஏற்கனவே பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக அதன் பணிப்பாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் இமேஷா முத்துமால தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றிடம் பேசிய அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

பண்டோரா அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதன்படி, பல இலங்கை அரசியல்வாதிகள் மற்றும் வர்த்தகர்களின் பெயர்கள் அதில் இடம்பெற்றுள்ளன.


இந்த அறிக்கையில் உள்ள அனைத்து தகவல்களும் பெறப்பட்டு உரிய முறையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்படும் என குற்றப் புலனாய்வு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உலகம் முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய பண்டோரா பேப்பர்ஸ் 2021ஆம் ஆண்டு வெளியிடப்பட்டிருந்தது.

இதில் சட்டவிரோதமாக சொத்து குவித்திருந்த அரசியல் தலைவர்கள், திரைப் பிரபலங்கள், விளையாட்டு வீரர்கள் மற்றும் தொழிலதிபர்கள் எனப் பல தரப்பட்ட பிரபலங்களின் விபரங்கள் வெளியிடப்பட்டிருந்தன.

இந்த ஆவணத்தை சர்வதேச புலனாய்வு பத்திரிக்கையாளர்கள் கூட்டமைப்பு வெளியிட்டிருந்தது. 117 நாடுகளிலிருந்து, 150 இற்கும் மேற்பட்ட செய்தி நிறுவனங்களின் பத்திரிகையாளர்கள் இந்த பணியில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றனர்.

இலங்கையின் முன்னாள் பிரதி அமைச்சர் நிருபமா ராஜபக்சவின் கணவர் திருக்குமார் நடேசனின் பெயரும் இந்தப் பட்டியலில் இடம்பெற்றிருந்த நிலையில், கொழும்பு அரசியலில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)



## வவுனியாவில் மரம் முறிந்து விழுந்ததில் அரச விடுதி, வர்த்தக நிலையம் சேதம்

வவுனியா, டிசெ.17

வவுனியா, ரயில் நிலையம் முன்பாக நின்ற பழைமையான மரம் முறிந்து விழுந்ததில் அரச விடுதி மற்றும் வர்த்தக நிலையம் ஒன்றும் சேதமடைந்தது.

நேற்று மதியம் இச் சம்பவம் இடம்பெற்றது.

வவுனியாவில் மீண்டும் அவ்வப்போது கனமழை பெய்து வருவதுடன், காற்றும் வீசி வருகின்றது. நேற்று மதியம் வீசிய காற்று காரணமாக வவுனியா ரயில் நிலையம் முன்பாக நின்ற பழைமையான மரம் முறிந்து விழுந்தது. இது மற்றுமொரு மரக் கிளை மீது முறிந்து விழுந்ததால் அந்த மரமும் முறிந்து விழுந்தது.

இதனால், அருகிலிருந்த அரச விடுதியின் கூரைப் பகுதி சேதமடைந்ததுடன், வர்த்தக நிலையம் ஒன்றின் கூரை மற்றும் சுவர் பகுதி என்பன உடைந்து சேதமடைந்தன. அத்துடன் மின்சார வயர்கள் அறுந்தும், இணைப்புகள் சேதமடைந்ததாலும் மின்சார துண்டிப்பு ஏற்பட்டது.

(எ- 10)

## இலங்கைக்கு வருகை தருகிறது சீன கடற்படை மருத்துவ கப்பல்

கொழும்பு, டிசெ. 17

சீனக் கடற்படையின் மருத்துவக் கப்பலான 'பீஸ் ஆர்க்' விரைவில் இலங்கைக்கு தரவுள்ளது.

குறித்த கப்பல் கடந்த வெள்ளிக்கிழமை தனது ஏழு நாள் பயணத்தை முடித்துக்கொண்டு ஜிபூட்டி துறைமுகத்தில் இருந்து இலங்கைக்கு புறப்பட்டுள்ளது.

இந்த கப்பல் 2024 ஆம் ஆண்டுக்கான மிஷன் ஹார்மானிக்காக புறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

## கிளிநொச்சி விவசாயிகளுக்கு உரம்

கிளிநொச்சி, டிசெ. 17

உலக உணவுத் திட்டத்தின் கீழ், ரஷ்ய அரசாங்கத்தினால் இலங்கைக்கு வழங்கப்பட்ட ஆழி உரம் நேற்று கிளிநொச்சி விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

கிளிநொச்சி பூநகரி கமநல சேவை நிலையத்தை சேர்ந்த விவசாயிகளுக்கு இவ்வாறு உரம் வழங்கப்பட்டது.

நீர்ப்பாசன காணிகளுக்கு, ஒரு ஏக்கருக்கு 12 கிலோ வீதமும், மானாவாரி காணிகளுக்கு ஒரு ஏக்கருக்கு 10 கிலோ வீதமும் உரம் வழங்கப்பட்டது.

பூநகரி கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு, உரம் வழங்கப்படவுள்ளது.

இன்றையதினம், சின்ன பல்லவராஜன் கட்டு கமக்காரர் அமைக்குட்பட்ட 145 விவசாயிகளுக்கு, உரம் வழங்கப்பட்டது.

இதில், பூநகரி கமநல சேவை நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பங்கேற்றனர். (அ)

## ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவுக்கு ராஷ்டிரபதி பவனில் சம்பிரதாய வரவேற்பு!







கொழும்பு, டிசெ. 17

மூன்று உத்தியோகபூர்வ விஜயமாக இந்தியா சென்றுள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு, நேற்று திங்கட்கிழமை புதுடில்லியில் அமைந்துள்ள ராஷ்டிரபதி பவனில் சம்பிரதாயபூர்வ வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்திய ஜனாதிபதி திரௌபதி முர்மு மற்றும் பிரதமர் நரேந்திர மோடி ஆகியோர் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவை ஜனாதிபதி பவனில் வரவேற்றனர்.

இங்கு ஜனாதிபதி அநுர குமார, ஒன்றிணைந்த இந்திய பாதுகாப்பு சேவையினரின் கௌரவிப்பு மரியாதையை பார்வையிட் டார்.

இதன் போது, இந்திய ஜனா திபதி திரௌபதி முர்முவும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவும் தத்தமது அமைச்சர்கள், இராஜதந்திரிகள் மற் றும் அதிகாரிகளுக்கு ஒரு வரையொருவர் அறிமுகம் செய்து வைத்தனர்.

கடந்த செப்ரெம்பரில் பதவியேற்ற பின்னர் அநுரகுமார திஸநாயக்க இந்தியாவுக்கு மேற் கொள்ளும் முதலாவது இரு தரப்பு விஜயம் இதுவாகும்.

(அ)

## இராணுவ ஊடகப் பிரிவுக்கு புதிய பணிப்பாளர் நியமனம்

கொழும்பு, டிசெ. 17

இராணுவ ஊடகம் மற்றும் உளவியல் செயற்பாட்டுப் பணிப்பகத்தின் பணிப்பாளராக பிரிகேடியர் எம்.ஜே.ஆர்எச் மெதகொட நேற்று நியமிக்கப்பட்டார்.

சிரேஷ்ட இயக்குநராக (இராணுவம்) இருந்த பிரிகேடியர் மெதகொட, பண்டாரவளை, பண்டாரவளை மத்திய கல்லூரியின் பழைய மாணவரும் 2007 இல் இலங்கை பாதுகாப்பு சேவைகள் கட்டளை மற்றும் பணியாளர் கல்லூரியில் பட்டம் பெற்றவருமாவார்.

(அ)

## ஈழநாடு முகவர் காலமானார்

யாழ்ப்பாணம், டிசெ. 17

ஈழநாடு பத்திரிகையின் நெல்லியடி முகவர்களில் ஒருவரான மொடேர்ன் ஸ்ரோர் உரிமையாளரான சந்தியாப்பிள்ளை அன்ரன் செல்வராசா கடந்த சனிக்கிழமை காலை காலமானார்

அன்னாரின் இறுதி ஆராதனைகள் நேற்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கரவெட்டி பரலோக மாதா ஆலயத்தில் நடைபெற்று கீரிப்பல்லி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. (அ)

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் புத்திக மனதுங்க பதவியேற்பு

கொழும்பு, டிசெ. 17

பொலிஸ் ஊடகப் பேச்சாளராக நியமிக்கப்பட்டுள்ள சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், சட்டத்தரணி புத்திக மனதுங்க நேற்று தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

பத்தரமுல்லையில் அமைந்துள்ள பொலிஸ் ஊடகப் பிரிவில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

கொழும்பு ஆனந்தா கல்லூரியின் பழைய மாணவரான மனதுங்க, பேராதனை பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பட்டதாரியாவதுடன் அதே பல்கலைக்கழகத்தில் அந்தத் துறையில் முதுமானி பட்டத்தையும் பெற்றுக்கொண்டுள்ளார்.

மேலும், இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் கற்று சட்டத்தரணியாகவும் தகைமை பெற்றுள்ளார்.

2014 ஆம் ஆண்டு உதவி பொலிஸ் அத்தியட்சகராக நியமனம் பெற்ற அவர் 2020 ஆம் ஆண்டு பொலிஸ் அத்தியட்சகராகவும் 2024 ஆம் ஆண்டு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராகவும் பதவி உயர்வு பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

## மின்சார வேலியில் சிக்கி இளைஞர் பலி!

கொழும்பு, டிசெ. 17

குருநாகல், மெல்சிறிபுர பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தித்தெனிய பிரதேசத்தில் உள்ள காணி ஒன்றில் மின்சார வேலியில் சிக்கி இளைஞர் ஒருவன் உயிரிழந்துள்ளதாக மெல்சிறிபுர பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் குருணாகல், மெல்சிறிபுர பிரதேசத்தைச் சேர்ந்த 29 வயதுடைய இளைஞர் ஆவார்.

இந்த இளைஞன் மெல்சிறிபுர - தித்தெனிய பிரதேசத்தில் உள்ள காணி ஒன்றில் சட்டவிரோதமாகப் பொருத்தப்பட்டிருந்த மின்சார வேலியில் சிக்கி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மெல்சிறிபுர பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
17.12.2024 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், மார்கழி 02

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# 13ஐ வலியுறுத்திய மோடி

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவிற்கு புதுடில்லியில் அமோக வரவேற்பளிக்கப்பட்டிருக்கின்றது. இரண்டு நாடுகளின் தலைவர்களுக்கும் இடையிலான ஊடக சந்திப்பின் போது, பிரதமர் மோடி இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான இணைப்புத் திட்டங்கள் தொடர்பில் அதிக கரிசனையை வெளிப்படுத்தியிருந்தார். இரு நாடுகளுக்குமான இணைப்புத் திட்டங்கள் சமரசங்களுக்கு அப்பாற்றப்பட்டது என்பதையே மோடியின் கருத்துக்கள் சுட்டிக்காட்டுகின்றன. அநுரகுமாரவின் உரையில் அனைத்தையும் அவர் வரவேற்றிருக்கின்றார். இலங்கையின் அரசியல் வரலாற்றில் தங்களின் வெற்றி புதியது என்பதைக் சுட்டிக் காட்டியிருக்கும் ஜனாதிபதி அநுர, இந்தியாவுடன் இணைந்து பயணிக்கும் விருப்பத்தை வெளிப்படுத்தியிருக்கின்றார்.

மோடி, தனதுரையில் அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்தின் முழுமையான அமுலாக்கம், மாகாண சபைத் தேர்தலை நடத்துவது ஆகிய விடயங்கள் தொடர்பில் அநுரகுமார திஸநாயக்கவுடன் கலந்துரையாடினார் எனவும் அநுரகுமார தலைமையிலான இலங்கை அரசாங்கம் இந்த விடயங்களை முன்னெடுக்குமென்று தான் நம்புவதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

ஜனதா விமுக்தி பெரமுனவின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா மாகாண சபை முறைமை பயனற்றது - அதனால், நாட்டுக்கு எந்தவொரு நன்மையும் இல்லையென்று கூறியிருந்த நிலையில், இந்தியப் பிரமதமர் மோடி, அநுரகுமாரவுடனான சந்திப்பின் போது, 13ஆவது திருத்தச்சட்டம் மற்றும் மாகாண சபையை வலியுறுத்தியிருப்பதானது, புதுடில்லி தெளிவான செய்தியொன்றை வழங்கியிருக்கின்றது.

மாகாண சபை முறைமையும், 13இன் உள்ளடக்கமும் இலங்கைக்கு பொருத்தமற்றது என்பதே அரசாங்கத்தின் நிலைப்பாடு எனின் அநுர குமார திசாநாயக்க இதனை தனது உரையில் வெளிப்படுத்தியிருக்கலாம். ஆனால், அவர் அது பற்றி எதனையும் குறிப்பிடவில்லை. இலங்கையின் மாகாண சபை முறைமை தொடர்பில் இந்தியா பேசுவது இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் என்பதை அநுர நன்கறிவார். இந்தியா தனக்குள்ள உரிமையின் அடிப்படையிலேயே அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் பேசுகின்றது. அநுரவின் புதுடில்லி விஜயத்திற்கு முன்பே 'ஈழநாடு' இந்த விடயங்களை தெளிவாக சுட்டிக் காட்டியிருந்தது.

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் கருத்துரைப்பதாயின், அதனை விடவும் ஒரு சிறந்த அரசியல் தீர்வுத்திட்டம் தொடர்பில் அநுரகுமார திஸநாயக்க இந்தியாவிற்கு சுட்டிக்காட்ட வேண்டும். ஆனால், அதில்தான் பிரச்சனையும் உண்டு. ஏனெனில் அவ்வாறானதொரு தீர்வாலோசனையை முன்வைக்கக் கூடிய நிலையில் அரசாங்கம் இல்லை. இருப்பதையும் பலவீனப்படுத்த வேண்டும் என்னும் கோரிக்கைதான் தென்பகுதியிலிருந்து மேலேழும்.

இந்த இடம்தான் பிரச்னைக்குரிய இடம். ஏனெனில் 'ஈழநாடு' ஏற்கனவே சுட்டிக்காட்டியது போன்று, இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின்படி, புதிய அரசியலமைப்பில் 13இற்கு பதிலான விடயம் தொடர்பில் இந்தியாவின் ஆலோசனையை பெற வேண்டிய கடப்பாடுண்டு. இந்திய - இலங்கை ஒப்பந்தம் அதற்கான உரித்தை வழங்கியிருக்கின்றது. இந்த விடயத்தைத்தான் சமஷ்டிக்கு அழுத்தம் கொடுங்கள் என்று புதுடில்லிக்கு கடிதம் எழுதுபவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

புதுடில்லியிடம் சமஷ்டிக் கோரிக்கையை வலியுறுத்தும் தமிழ் கட்சிகளின் தலைவர்கள் என்போர் ஒன்றில் அரசியலை புரிந்துகொள்ளும் திறனற்றவர்களாக இருக்க வேண்டும் அல்லது, தமிழ் மக்களுக்கு எந்தவொரு நல்ல விடயமும் நடத்துவிடக் கூடாது என்பதில் ஒற்றைக் காலில் நிற்பவர்களாக இருக்க வேண்டும். இதில் அரசியல் கட்சிகள் மட்டுமல்ல தங்களை சிவில் சமூகமாக, கருத்துருவாக்கிகளாக முன்னிலைப்படுத்துபவர்களும் அடங்குவார்கள். பிரபாகரனுக்கு பின்னரான, கடந்த பதினைந்து வருடங்களில் தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விடயத்தில் ஒரு சிறிய முன்னேற்றத்தைக் கூட தமிழ் கட்சிகள் என்பவற்றால் காண்பிக்க முடியவில்லை.

# யாழில் விபத்தில் சிக்கிய முதியவர் மரணம் மகன் படுகாயம், பஸ் சாரதி தப்பியோட்டம்

*யாழ்ப்பாணம், டிசெ. 17*

இளவாலைப் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் வயோதிபர் ஒருவர் உயிரிழந்தார். அவரது மகனான இளைஞன் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். பண்டத்தரிப்பு பற்றிமா தேவாலயத்துக்கு அருகில் வசித்த மோ. பாக்கியநாதன் (வயது - 76) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

விபத்தில் சிக்கிய இருவரும் நேற்று முன்தினம் இரவு 09. 30 மணியளவில் பெரியவிளான், பற்றிமா தேவாலயத்துக்கு அருகாமையில் வீதியில் நின்றிருந்தனர். இதன்போது, தனியார் பேருந்து ஒன்று தனது சேவையை முடித்துவிட்டு சென்றுகொண்டிருந்தபோது தந்தை, மகன் ஆகிய இருவர் மீதும் மோதியது.

இந்த விபத்தில் படுகாயமடைந்த இருவரும் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டனர். இருப்பினும், சிகிச்சை பலனின்றி தந்தை உயிரிழந்தார். மகன் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றார்.

பேருந்தின் சாரதி தப்பிச் சென்ற நிலையில், பேருந்தை எடுத்துச் சென்ற இளவாலை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(எ- 05)

# காவோலைக்கு மேலே கற்கள் போட்டு யாழில் அமைக்கப்படும் காப்பெற் வீதி

*யாழ்ப்பாணம், டிசெ.17*

வடக்கு மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ் உள்ள சாவகச்சேரி நகர சபைக்குட்பட்ட மீசாலை - அல்லாரை பிரதான வீதியின் புனரமைப்பு பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.



இந்த வீதி புனரமைக்கப்படுகின்ற பொழுது வீதியின் குறிப்பிட்ட சில இடங்களில் ஓர் அடிக்கு ஆழமாக நீளமான குழிகள் தோண்டப்பட்டு அதற்குள் காவோலைகள் போடப்பட்டு அதற்கு மேலாக கற்கள் போடப்பட்டு வீதிப் புனரமைப்பது நடைபெறுகிறது. இந்தச் செயல்பாடு பொதுமக்களிடையே ஆச்சரியத்தையும் விசனத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பில் வடக்கு மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்தினர் உடன் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு செய்யப்படுவதற்கான காரணத்தை பொதுமக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும் என்று சாவகச்சேரி நகர சபை முன்னாள் உறுப்பினர் ஞா. கிஷோர் கோரிக்கை விடுத்துள்ளார். (எ-05)

# நவாலியில் மார்க்கண்டு சுவாமி குருபூஜை விழா

*யாழ்ப்பாணம், டிசெ. 17*


சைவ வாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் சிவசிறீ. பால. திருகுணானந்தக்குருக்கள் நடத்தும் வாராந்த திருவாசக சிறப்புச் சொற்பொழிவும், மாதந்தோறும் ஈழத்து சித்தர்கள் குருபூஜை விழா தொடர் - 06 தவத்திரு மார்க்கண்டு சுவாமிகள் குருபூஜை விழா, நவாலி தெற்கு திருவருள் மிகு சிறீ நாகராஜா இராஜேஸ்வரி அம்பாள் திருக்கோவில் பிரதான மண்டபத்தில் எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் ஆன்மீக விருந்தினராக யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர், கலாநிதி பா. தனபாலன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

தவத்திரு மார்க்கண்டு சுவாமிகள் குருபூஜையை தொடர்த்து மாணவர்களின் கலைநிகழ்வுகளும் அதனையடுத்து "ஈழத்து சித்தர்களில் மார்க்கண்டு சுவாமிகள்" என்னும் விடயப்பொருளில் பிரசங்கச்சுடர், இளஞ் சைவப்புலவர் க. கயிலைவாசன் சொற்பொழி நிகழ்த்துவார். சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. தொடர்ந்து ஆன்மீக விருத்தினர் உரையும்

குருபூஜையை முன்னிட்டு மாணவர்களிடம் நடத்தப்பட்ட போட்டி பரீட்சையில் வெற்றியீட்டிய மாணவர்களுக்குப் பாராட்டுப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.(எ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
கம்பீரமாக பேசி சில காரியங்களை முடிப்பீர்கள். உடன்பிறந்தவர்களால் பயனடைவீர்கள். விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். அரசால் ஆதாயம் உண்டு. வாகனத்தை சீர் செய்வீர்கள்.

**இடபம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்- மனைவிக்குள் இருந்து வந்த பிரச்னைகள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். இழுபறியாக இருந்த வேலைகள் முடியும். இழந்ததை மீட்பீர்கள்.

**மிதுனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஓய்வின்றி உழைக்க வேண்டி இருக்கும். மன இறுக்கங்கள் உண்டாகும். அதிக வேலைச்சுமையால் அவ்வப்போது கோபப்படுவீர்கள்.

**கடகம்**
பிள்ளைகளின் உணர்வுகளை புரிந்து கொள்ளுங்கள். வாகனம் அடிக்கடி தொந்தரவு தரும். எளிதாக முடிய வேண்டிய விஷயங்கள் கூட பல முறை போராடி முடிப்பீர்கள்.

**சிம்மம்**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். உறவினர் நண்பர்களால் அனுகூலம் உண்டு. வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். பழைய கடனை பைசல் செய்வீர்கள்.

**கன்னி**
பிள்ளைகளால் மதிப்பு கூடும். உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். நெருங்கியவர்களுக்காக மற்றவர்களின் உதவியை நாடுவீர்கள்.

**துலாம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த அலைச்சல் நீங்கும். பணப்புழக்கம் கணிசமாக உயரும். குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். சுப நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள்.

**விருச்சிகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில முக்கிய அலுவல்களை மற்றவர்களை நம்பி ஒப்படைக்காமல் நீங்களே செய்து முடிக்கப் பாருங்கள். மறைமுகப் பிரச்னைகள் வரும். பொறுமை தேவைப்படும் நாள்.

**தனுசு**
உங்கள் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். ஆடை ஆபரணங்கள் புதிதாக வாங்குவீர்கள். கல்யாணப் பேச்சுவார்த்தை சாதகமாக முடிவடையும்.

**மகரம்**
உறவினர்கள் நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். எதிர்பாராத பணவரவு உண்டு. அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**கும்பம்**
புதிய திட்டங்களை தீட்டுவீர்கள். பிள்ளைகளின் உத்தியோகம், உயர்கல்வி பற்றி யோசிப்பீர்கள். நட்பால் ஆதாயம் உண்டு. அநாவசிய செலவுகளை கட்டுப்படுத்துவீர்கள். கனவு நனவாகும் நாள்.

**மீனம்**
தாயாருடன் வீண் விவாதம் வந்து போகும். பழைய பிரச்னைகளுக்கு சுமூக தீர்வு காண்பீர்கள். எதிர்பாராத செலவுகள் வந்தாலும் எதிர்பார்த்த பணம் வந்து சமாளிப்பீர்கள்.

# இன்னொரு மொழியைக் கற்பதால் நாம் குறைந்துவிடப் போவதில்லை

## வடமாகாண ஆளுநர் வேதநாயகன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 17

இன்னொரு மொழியைக் கற்பதால் நாம் குறைந்துவிடப் போவதில்லை. மாறாக நாம் வளர்வோம். எமது திறனை ஆற்றலை வளர்த்துக்கொள்ள இன்னொரு மொழியைக் கற்பது அவசியமானது என்று வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் வலியுறுத்தினார்.

சூரிய நிறுவகத்தின் ஏற்பாட்டில் இரண்டாம் மொழி சிங்கள கற்கை நெறியைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு சுதுமலை குபேரமஹாலில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சூரிய நிறுவகத்தின் ஸ்தாபகரும் முன்னாள் சபாநாயகருமான கரு ஜெயசூரியவும் கலந்துகொண்டார். அத்துடன் சுவிஸர்லாந்து தூதரகத்தின் பிரதித் தூதுவர் ஒலிவர் விருந்தினராகப் பங்கேற்றிருந்தார்.

மாணவர்களுக்கான சான்றிதழ்களை வழங்கிய பின்னர் பிரதம விருந்தினர் உரையாற்றிய ஆளுநர்,

கிளிநொச்சி மாவட்டச் செயலாளராக தான் பணியாற்றிய காலத்தில் பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சராக இருந்தவர் கரு ஜெயசூரிய என்றும் அவர் சிறப்பான தலைமைத்துவத்தை வழங்கிய ஒருவர் எனவும் குறிப்பிட்டார்.



கரு ஜெயசூரியவைப் போன்று தன்னால் நினைவுகூரப்படும் மற்றொருவராக மறைந்த முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர இருக்கின்றார் என்றும், தான் யாழ். மாவட்டச் செயலராக பணியாற்றியபோது நிதி அமைச்சராக இருந்த அவர் பல்வேறு வகைகளிலும் உதவியதாகவும் குறிப்பிட்டார்.

இன ஐக்கியத்துக்காகவும் தேசிய ஒருமைப்பாட்டுக்காகவும் சிங்கள மக்கள் தமிழ் மொழியையும், தமிழ் மக்கள் சிங்கள மொழியையும் கற்கும் வகையில் இலவசமாக வகுப்புகளை நடத்திவரும் சூரிய நிறுவகத்தையும் அதன் நிறுவுநர் முன்னாள் சபாநாயகர் கரு ஜெயசூரியவையும் ஆளுநர் பாராட்டினார்.

சிங்கள மொழியை இரண்டாம் மொழியாக கற்பது இந்த நாட்டில் எங்கும் சென்று சேவையாற்றக் கூடிய வாய்ப்பை உருவாக்கும் எனவும் ஆளுநர் குறிப்பிட்டார். கூடுதலான மொழியறிவு எங்களை மேம்படுத்த உதவும். இதன் ஊடாக ஆய்வுக்கான திறன் உள்ளிட்ட பல்வேறு ஆளுமைகளை வளர்க்க அது உதவும் என்றும் அவர் கூறினார்.

இந்த நிகழ்வில் தமிழ் மாணவர்களால் பல்வேறு கலை நிகழ்வுகள் சிங்கள மொழியிலும் நடத்தப்பட்டன. (எ-05)

# திருநெல்வேலி யுசிமாஸ் மாணவர்கள் உலகக் கிண்ண போட்டியில் சாதனை




யாழ்ப்பாணம், டிசெ. 17

2024ஆம் ஆண்டு சர்வதேச மனக் கணிதப் போட்டியில் திருநெல்வேலி யுசிமாஸ் நிலைய மாணவர் அணி சாதனை படைத்துள்ளது.

இந்தியாவின் தலைநகர் புது டில்லியில் சர்வதேச மனக் கணிதப் போட்டி இம்மாதம் 14ஆம் திகதி நடைபெற்றது. இப் போட்டியில் உலகளாவிய ரீதியில் 30 இற்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து 6,000 மாணவர்கள் பங்குபற்றியிருந்தனர்.

இதில், இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் 103 மாணவர்கள் சென்றிருந்ததோடு, திருநெல்வேலி யுசிமாஸ் நிலையத்திலிருந்து 27 மாணவர்கள் பங்குபற்றியிருந்தனர். திருநெல்வேலி யுசிமாஸ் அணியைச் சேர்ந்த அத்விதா சிந்துஜன் (7 வயது),திருவரன் கேஷிகன் (8 வயது), சுதர்சன் ஹரிப்பிரசாத் (10 வயது) ஆகிய 3 மாணவர்கள் சம்பியன் வெற்றிக் கிண்ணங்களையும், அச்சுதா மதிவதனன் (9 வயது )கேனுஜா மோகனகுமார் (8 வயது ) ஆகிய 2 மாணவர்கள் முதலாம் இடத்தையும் விதுஷியா மதிவதனன்(8 வயது), பிரணவன் யதுஷ் (9 வயது), ஷகாணி கேதீசன் (7 வயது )வினோஷ்கா பிரசன்னா (10 வயது ),அஷ்வினி அனோஜன் (9 வயது ), சிவகாரன் குருப்பிரசாத் (6 வயது ) ஆகிய 6 மாணவர்கள் இரண்டாம் இடத்தையும், சயந்தன் தரணிகன், சத்யகி இளங்குமரன், சாஹித்யா கபிலன், மதுரந்தி சதீஸ்வரன், ஐதிகா சதீஸ்வரன், அஷ்மிதா ரகுரட்ணம், அமுதகரன் அபினாஷ், தேவசிறீ காந்தரூபன், கபிலன் சாஜித், கருணியா சபேசன், தனதீபன் அக்க்ஷயன், அஷ்விதா இந்திரகாசன், அபிஷா கோகிலராஜ், ஆஹானியா ரோஹித், ஜெயக்குமார் ஹிருஷிகன்,சசிகரன் அனிஷ் ஆகிய 16 மாணவர்கள் சர்வதேச ரீதியாக மூன்றாம் இடத்தையும் தமதாக்கிக் கொண்டனர்.

இம்முறை சிறப்பாக முதல் தடவையாக திருநெல்வேலி யுசிமாஸ் நிலையத்தில் இருந்து யுசிமாஸ் உலகக் கிண்ணப் போட்டியில் பங்கு பற்றி அச்சுதா மதிவதனன், சயந்தன் தரணிகன் வெண்கல கிண்ணத்தை வென்று சாதனை படைத்துள்ளனர்.

பயிற்றுவிப்பாளர்களின் மாதக்கணக்கான அர்ப்பணிப்பும், பல வருட அனுபவமுமே இந்த இளையவர்களின் வெற்றிக்கு வழிவகுத்துள்ளது.

யுசிமாஸ் திருநெல்வேலிக் கிளையின் 20 வருட சாதனைப் பயணம், புத்தாக்கம் மிக்க மாணவர்களை உருவாக்குவதில் பெரும் வெற்றி கண்டிருப்பதனை சர்வதேச போட்டி முடிவுகள் நிரூபித்துள்ளன.

சர்வதேச மனக் கணிதப் போட்டியில் திருநெல்வேலி யுசிமாஸ் நிலையம் கடந்த 8 வருடங்களாக சர்வதேச போட்டிக்கு மாணவர்களை அனுப்பி வெற்றிப் பயணத்தைத் தொடர்கின்றது.

30 இற்கும் மேற்பட்ட நாடுகள் பங்குபற்றிய சர்வதேச மனக் கணிதப் போட்டியில் யாழ். மண்ணின் மாணவர்கள் வெற்றி வாகைசூடி நாட்டுக்கும் நம் மண்ணுக்கும் பெருமை சேர்த்தமைக்கு வாழ்த்துகின்றோம் என்று யுசிமாஸ் திருநெல்வேலி நிலையத்தினர் தெரிவித்துள்ளனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது கல்வித் தகைமை குறித்து சவால் விடுத்தால் பதிலளிப்பேன்!

## கூறுகிறார் நாமல் ராஜபக்ஷ



கொழும்பு, டிசெ. 17

எனது கல்வித் தகைமை தொடர்பில் பலர் கேள்வி யெழுப்பியுள்ளார்கள். கடந்த காலங்களிலும் இவ்வாறு குற்றஞ் சாட்டப்பட்டது. நான் முறையாகவே கல்வித் தகைமையை பெற்றுக் கொண்டுள்ளேன். சமூக வலைத் தளங்களில் விமர்சனங்களை முன்வைப்பவர்கள் முறை யான வகையில் எனது கல்வித் தகைமையை சவாலுக் குட்படுத்தினால் அதற்கு சிறந்த முறையில் ஆவணங் களுடன் பதிலளிப்பேன் என பொதுஜன பெரமுன வின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன் தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-போலியான கல்வித் தகைமையை குறிப்பிட்டுக் கொண்டு பதவிக்கு வந்த அசோக ரன்வல பதவி விலகியமை வரவேற்கத் தக்கது. படித்தவர்களை மாத்திரம் உள்ளடக்கியதாக பாராளுமன்றத்தை அமைப்போம் என்று ஜனாதிபதி குறிப்பிட்ட காரணத்தால் தான் அரசியலுக்குள் பிரவேசிக்கவேண்டும் என்பதற்காக இல்லாத கல்வித் தகைமையை பலர் குறிப்பிட்டுள்ளார்கள்.

பல எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் நாட்டு மக்கள் ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க தலைமையில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளார்கள். தேர்தல் காலத்தில் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை அரசாங்கம் முறையாக நிறைவேற்றவேண்டும். நடைமுறைக்கு சாத்திய மற்ற வாக்குறுதிகளை இந்த அரசாங்கம் மக்களுக்கு வழங்கியது, அதுவே இன்று அரசாங்கத்துக்கு எதிர்வினையாக அமைந்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொங்கு பாலத்தில் என்னை தூக்கிச் சென்றாரா அல்லது ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவை தூக்கிச் சென்றாரா என்பதை மக்கள் ஆராய வேண்டும். முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமுல்படுத்திய பொருளாதார கொள்கையையே ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தொடர்ந்து அமுல்படுத்துகிறார்.

குறிப்பாக சர்வதேச நாணய நிதியத்துடனான செயற்திட்டத்தை குறிப்பிட வேண்டும். ஜனாதிபதி எளிமையாக செயற்படுதால் நாட்டு மக்களுக்கு எவ்வித பயனும் கிடைக்கவில்லை. ஏற்றுக் கொண்ட வரிக் கொள்கைகளை மறுசீரமைத்தால் மாத்திரமே மக்களுக்கு பயன் கிடைக்கும்.

கடன் மறுசீரமைப்பு விவகாரத்தில் அரசாங்கம் இரட்டை நிலைப்பாட்டில் இருந்து கொண்டு செயற்படுகிறது. மக்களுக்கு ஒன்றை குறிப்பிட்டு விட்டு, இரகசியமான முறையில் பிறிதொன்றை செயற்படுத்துகிறது. ஆகவே கடன் மறுசீரமைப்பு விவகா ரத்தில் உண்மையான நிலைப் பாட்டை அரசாங்கம் பகிரங் கப்படுத்த வேண்டும்-என்றார். (அ)

# மின் கட்டணத் திருத்தம் யோசனை இன்று முதல்!

கொழும்பு, டிசெ. 17

மின்சாரக் கட்டணத் திருத்தப் பிரேரணைக்கான பொது மக்களின் கருத்துக்களைப் பெறும் நடவடிக்கை இன்று முதல் ஆரம்பிக்கப்படும் என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன்படி, ஜனவரி 08 ஆம் திகதி வரை இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இது தொடர்பான முன்மொழிவுகள் மின்சாரக் கட்டணங்கள், இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு, 6வது தளம், இலங்கை வங்கி வர்த்தகக் கோபுரம், கொழும்பு 03 என்ற முகவரிக்கும், கைெழ ஸ்ரீரஉளட.பழஎ.டம என்ற மின்னஞ்சல் ஊடாகவும் பொதுமக்களின் ஆலோசனைக்கு அனுப்பப்படலாம்.

076 42 710 30 என்ற வாட்ஸ் அப் எண்ணிலும் நீங்கள் கருத்துகளையும் ஆலோசனைகளையும் சமர்ப்பிக்கலாம்.

இலங்கை மின்சார சபையினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மின்சார கட்டண திருத்த யோசனை தொடர்பான இறுதித் தீர்மானம் எதிர்வரும் ஜனவரி மாதம் 17 ஆம் திகதி அறிவிக்கப்படும் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (அ)

# பெலியத்தை ரயில் நிலைய விபத்து 3 ஊழியர்கள் பணி இடைநிறுத்தம்!

கொழும்பு, டிசெ. 17

பெலியத்தை ரயில் நிலையத்தில் இரு ரயில்கள் மோதி விபத்துக்குள்ளான சம்பவம் தொடர்பில் மூன்று ஊழியர்கள் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

நேற்று முன் தினம் காலை பெலியத்தையிலிருந்து அனுராதபுரம் நோக்கிச் செல்லவிருந்த ரஜரட்டை ரஜின ரயில், பெலியத்தை ரயில் நிலையத்தில் தவறான பாதையில் ஓடி சாகரிகா ரயிலுடன் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக சிறப்பு விசாரணையை ரயில்வே திணைக்களம் ஆரம்பித்துள்ளது.

அதன்படி, இச்சம்பவம் தொடர்பாக மூன்று ஊழியர்கள் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளதாக ரயில்வே துணைப் பொது முகாமையாளர் என்.ஜே. இந்திபொலகே குறிப்பிட்டார்.

குறித்த ரயில்களுக்கு பதிலாக மாற்று ரயில்களை இயக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# அடையாளம் தெரியாத சடலம் கொள்ளுப்பிட்டியில் நேற்று மீட்பு!

கொழும்பு, டிசெ. 17

கொழும்பு, கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள கட்டடம் ஒன்றில் அடையாளம் தெரியாத சடலம் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

கட்டடத்தின் தாழ்வாரத்தில் சடலம் கண்டெடுக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த நபர் 65 முதல் 70 வயதுக்கு இடைப்பட்டவராகவும், 05 அடி 08 அங்குல உயரம் கொண்டவராகவும் இருக்கலாம் என கருதப்படுகிறது.

சடலம் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், கொள்ளுப்பிட்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# கோழி இறைச்சி விலை உயரலாம்!

கொழும்பு, டிசெ. 17

எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் கோழி இறைச்சியின் விலை மேலும் அதிகரிக்கலாம் என வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

தற்போது சந்தையில் 1 கிலோ கிராம் கோழி இறைச்சியின் விலை 900 ரூபாய் முதல் 1200 ரூபாய் வரை உள்ளது.

இருப்பினும் எதிர்வரும் நாட்களில் கோழி இறைச்சியின் விலை மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக வியாபாரிகள் குறிப்பிட்டுள்ளனர். (அ)

# கட்டுப்பாட்டு விலைகளை மீறிய வர்த்தகர்களுக்கு எதிராக வழக்கு

கொழும்பு, டிசெ. 17

அரிசி விலைக் கட்டுப்பாடு தொடர்பான சோதனை நடவடிக்கைகளால் இதுவரை 300 இற்கும் மேற்பட்ட வர்த்தகர்கள் சட்டத்தின் கீழ் சிக்கியுள்ளதாக நுகர்வோர் சேவை அதிகார சபை தெரிவித்துள்ளது.

கடந்த 10ஆம் திகதி தொடக்கம் இதுவரை முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்புகளில் இவர்கள் பிடிபட்டதாக அந்த அதிகார சபையின் தகவல் பணிப்பாளர் அசேல பண்டார தெரிவித்தார்.

அவர்களுக்கு எதிரான வழக்கு தாக்கல் நடவடிக்கைகள் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ)

# பண்டிகைக் காலத்தில் முட்டை விலை மாற்றம்

கொழும்பு, டிசெ. 17

எதிர்வரும் பண்டிகைக் காலத்துக்காக முட்டை யொன்றை சில்லறை விலையில் 30 முதல் 35 ரூபாவுக்கு விற் பனை செய்ய தீர்மானிக்கப்பட் டுள்ளதாக அகில இலங்கை முட்டை வர்த்தக சங்கம் தெரிவித்துள்ளது.

சராசரியாக 50 கிராமுக்கு குறைவான எடையுள்ள முட்டை 30 ரூபாய் முதல் 32 ரூபாய் வரை விலை கொடுத்து வாங்கலாம் என அந்த சங்கத் தின் தலைவர் அன்றன் அப்புஹாமி தெரிவித்தார்.

55 கிராமுக்கு மேல் உள்ள பெரிய முட்டையை 33 ரூபாய் முதல் 35 ரூபாய் வரையில் வாங்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

சந்தையில் பெரும்பாலும் இந்த விலைக்கே முட்டைகள் கிடைப்பதாகவும், முட்டைகளை இந்த விலைக்கு மேல் வாங்கவேண்டாம் எனவும் நுகர்வோர்களை அவர் கேட்டுக் கொண்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-வரும் பண்டிகைக் காலத்தில் முட்டையை 30 முதல் 35 ரூபாய் வரை விற்பனை செய்ய முடிவு செய்துள்ளோம்.

எனவே, அனைத்து சில்லறை கடைகளிலும் முட்டையை 35 ரூபாய்க்கு குறைவாக விற்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

2023 ஆம் ஆண்டு காலகட்டத்தில், ஒரு முட்டை 65-70 விலையில் இருந்தது.

ஆனால் முட்டை உற்பத்தி அதிகரித்து சந்தையில் இன்று விலை நிலையாக உள்ளது.

அனைத்து விவசாயிகளுக்கும் முட்டை உற்பத்தி உபரியாக உள்ளது.

50 கிராம் முட் டையை 30 ரூபாய் முதல் 32 ரூபாய்க்கு பெறலாம்..55 கிராமுக்கு மேல் உள்ள முட்டைகள் 33, 34, 35 ஆகிய விலைகளில் வாங்கலாம்.

அதற்கு அதிகமாக விற்றால் அதனை வாங்க வேண்டாம்-என்றார். (அ)

# சபாநாயகர் பதவி வகிக்க கலாநிதி தேவையில்லை!

## சமல் ராஜபக்ஷ கூறுகிறார்



கொழும்பு, டிசெ. 17

சபாநாயகராக வருவதற்கு கலாநிதி பட்டமோ, கல்விச் சான்றிதழோ தேவையில்லை, பாராளுமன்றத்துக்கு தெரிவான எவரும் சபாநாயகராக முடியும் என முன்னாள் அமைச்சர் சமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

அவர் கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-முன்னாள் சபாநாயகர் அசோக ரன்வல கலாநிதி பட்டம் பெற்றவர் என்ற விவரங்களை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தால் மட்டுமே பிரச்னை ஏற்படும்.

கலாநிதி பட்டம் தொடர்பான சர்ச்சை வெடித்ததை அடுத்து, சபாநாயகர் பதவியிலிருந்து ரன்வல விலகியது பாராட்டுக்குரியது.

இது ஒரு பெரிய பிரச்னை அல்ல - என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்த ஆட்சியின் சர்ச்சைக்குரிய விமானசேவை குறித்து விசாரணை

## பிரதி அமைச்சர் ருவன் கொடித்துவக்கு

கொழும்பு, டிசெ. 17

**மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட சர்ச்சைக்குரிய, விமான சேவையான மிஹின் லங்காவின் நிதிப் பொறுப்புகள் தொடர்பில், இந்த வாரம் கலந்துரையாடப்பட உள்ளதாக துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் பிரதி அமைச்சர் ஜனித ருவன் கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.**

எனினும், மிஹின் லங்காவின் தீர்க்கப்படாத நிலையை நிவர்த்தி செய்வதை விட எதிர்வரும் சுற்றுலாப் பருவத்துக்கான தயாரிப்புகளுக்கு அரசாங்கம் முன்னுரிமை அளித்து வருவதை அவர் உறுதிப்படுத்தியுள்ளார்

2007ஆம் ஆண்டு நிறுவப்பட்டு 2016ஆம் ஆண்டு ஒக்ரோபர் 30ஆம் திகதி தனது செயற்பாடுகளை நிறுத்திய மிஹின் லங்கா, தமது நிறுவன செயல் முறையுடன் தொடர்புடைய குறிப்பிடத்தக்க கடன்களை இன்னமும் தீர்க்கவில்லை.

நிதி அமைச்சகத்தின், ஆண்டு நிதி நிலை அறிக்கையின்படி, 2024 ஜூன் 30 வரை, மிஹின் லங்கா லிமிடெட்டின் கீழ் 3,201.77 மில்லியன் ரூபாய்கள் நிலுவையில் உள்ளன.

இந்தநிலையில், இது தொடர்பில் விசாரணைகள், மிக விரைவில் நடத்தப்படும் என்று சிவில் விமான சேவைகள் பிரதி அமைச்சர் ஜனித ருவன் கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

(அ)

# 540 கையடக்கத் தொலைபேசிகள் 2024 இல் காலி சிறையில் பறிமுதல்!

கொழும்பு, டிசெ. 17

காலி சிறைச்சாலையில் இவ்வருடம் இதுவரையில் 540 கையடக்கத் தொலைபேசிகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக புதிய அரசாங்கத்தின் முதலாவது காலி மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் காலி மாவட்ட செயலகத்தில் தொழிற்கல்வி பிரதியமைச்சர் நளின் ஹேவகே தலைமையில் நடைபெற்ற கூட்டத்திலேயே இந்த தகவல் வெளிப்படுத்தப் பட்டது.

கையடக்கத் தொலைபேசிகள் கடத்தலுக்கு சிறைச்சாலை அமைந்திருந்த இடம் பெரும் பங்களிப்பை வழங்கியுள்ளதாக காலி சிறைச்சாலையின் பிரதி பிரதான சிறைச்சாலை அதிகாரி தனுஷ்க புஸ்பகுமார தெரிவித்துள்ளார்.

மேலும் கூட்டத்தில் பேசிய காலி மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஜகத் சேரம், சிறைச்சாலை மதில் சுவருக்கு மேல் பாதுகாப்பு வலை மற்றும் சிசிரிவி கமெராக்களை பொருத்துவதற்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதாக கூறினார்.

(அ)

# தாயை கொலை செய்த மகன் உயிர்மாய்த்தார்!

கொழும்பு, டிசெ. 17

தனிப்பட்ட தகராறு காரணமாக ஏற்பட்ட வாக்குவாதம் முற்றி தாயை கூரிய ஆயுதத்தால் தாக்கி கொன்ற மகன் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன் தினம் கொடகவெல, பிசோகொடுவ பிரதேசத்தில் 82 வயதுடைய பெண் ஒருவர் அவரது மகனால் இவ்வாறு கொல்லப்பட்டிருந்தார்.

பின்னர், மகன் அப்பகுதியில் இருந்து தப்பிச் சென்றதுடன், உடவலவ, குருமடயா பிரதேசத்தில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியால் தன்னைத் தானே சுட்டுக் கொண்டதாக பிரதேசவாசிகள் பொலிஸ் நிலையத்துக்கு அறிவித்துள்ளனர்.

சந்தேக நபர் கல்பாய, பல்லேபெத்த பிரதேசத்தில் வசித்து வந்த 54 வயதுடையவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொடகவெல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(அ)

# பொலிஸ் பரிசோதகரை மோதிவிட்டு தப்பியோடிய காரின் சாரதி சின்னார்!

கொழும்பு, டிசெ. 17

கண்டி வத்துகாமம் பகுதியில் தலைமை பொலிஸ் பரிசோதகர் ஒருவரை மோதிவிட்டுத் தப்பியோடிய காரின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன், விபத்தை ஏற்படுத்திய கார் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

கைதான சாரதி அம்பாறை பகுதியைச் சேர்ந்தவர் என பொலிஸார் குறிப்பிட்டனர்.

வத்துகாமம் பகுதியைச் சேர்ந்த குறித்த பொலிஸ் பரிசோதகர் நேற்று முன்தினம் அதிகாலையில் உடற்பயிற்சி நடவடிக்கையில் ஈடுபடுவதற்காகச் சென்றுள்ளார்.

இதன்போது கறுப்பு நிற கார் ஒன்றுடன் மோதி அவர் விபத்துக்குள்ளாகியுள்ளார்.

இதன் பின்னர் குறித்த பொலிஸ் பரிசோதகரின் சடலம் வத்துகாமம் நகரில் உள்ள தனியார் வங்கியொன்றுக்கு அருகில் கண்டெடுக்கப்பட்டதாக காவல்துறை தெரிவித்துள்ளது.

இதனையடுத்து, குறித்த காரின் சாரதி அங்கிருந்து தப்பியோடியுள்ளதாக பொலிஸார் முன்னெடுத்த விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான சிசிரிவி காணொளிகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் படி, குறித்த கார் உரிமையாளர் மாத்தளை பகுதியில் தலைமறைவாகியிருந்த போது கைது செய்யப்பட்டார்.

(அ)

# சாரதியை தாக்கி காட்டுக்குள் தள்ளிவிட்டு ஓட்டோ கடத்தல்!

## கம்பளையில் பயங்கரம்!!

கொழும்பு, டிசெ. 17

சாரதியை தாக்கி காட்டுக்குள் தள்ளிவிட்டு ஓட்டோவை கடத்திச்சென்ற இரு நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கம்பளை பகுதியிலேயே நேற்று முன் தினம் மதியம் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கம்பளை நகரில் இருந்து அம்புலாவ பகுதிக்கு செல்ல வேண்டும் எனக்கூறி இரு நபர்கள் வாடகை ஓட்டோவொன்றில் ஏறியுள்ளனர்.

ஓட்டோவில் பயணித்துக் கொண்டிருக்கையில், அம்புலாவ, கல்பங்கலாவ பகுதியில் வைத்து ஓட்டோ சாரதியின் மழைக் கவசத்தை எடுத்து அவரின் கழுத்தை நெரித்து அடித்து காட்டு பகுதியில் தள்ளிவிட்டு ஓட்டோவை கடத்தியுள்ளனர்.

வேகமாக ஓட்டோவை ஓட்டிச்செல்கையில், எம்மாத்தகம பகுதியில் இருந்து அம்புலாவ பகுதிக்கு வந்த காரொன்றுடன் மோதி ஓட்டோ விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தையடுத்து ஓட்டோவைக் கடத்திய இருவரும் காட்டுக்குள் பாய்ந்து தலைமறைவாகியுள்ளனர்.

விடயம் பிரதேச மக்களுக்கு தெரியவர, இரவு முழுவதும் தேடும் பணியில் ஈடுபட்டு இரு சந்தேக நபர்களை பிடித்து பொலிஸாருக்கு ஒப்படைத்துள்ளனர்.

23 மற்றும் 25 வயதுகளுடைய இரு சந்தேக நபர்களும் கம்பளை, எக்கால்ல பகுதியை சேர்ந்தவர்கள் என தெரிய வந்துள்ளது.

(அ)

# ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய பட்டியல் உறுப்பினர்கள் இன்று சத்தியப்பிரமாணம்

கொழும்பு, டிசெ. 17

ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப்பட்டியல் உறுப்பினர்கள் இன்று சத்தியப்பிரமாணம் செய்துகொள்ளவுள்ளனர்.

மனோ கணேசன், நிஸாம் காரியப்பர்,சுஜீவ சேனசிங்க ,எம்.மொஹமட் ஆகியோர் இன்றைய பாராளுமன்ற அமர்வின் ஆரம்பத்தின்போது சத்தியப்பிரமாணம் செய்துகொள்கின்றனர் இதனையடுத்து, புதிய சபாநாயகரை தெரிவு செய்யும் பணிகள் பிரதிச் சபாநாயகர் தலைமையில் நடைபெறும்.

(அ)

# விபத்தில் சிறுமி உயிரிழப்பு

கொழும்பு, டிசெ. 17

கெட்டம்பேயிலிருந்து கண்டி நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று கண்டி வில்லியம் கொபல்லாவ மாவத்தையில் நேற்றுக் காலை சிறிய ரக லொறி ஒன்றுடன் மோதியதில் விபத்து ஏற்பட்டது.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த மகள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன் தந்தையும் காயமடைந்தார்.

17 வயதுடைய பாடசாலை மாணவி ஒருவரே உயிரிழந்துள்ளார். சிறுமியின் சடலம் கண்டி தேசிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் கண்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(அ)

# போலியான சான்றிதழ் சமர்ப்பித்து 14 ஆசிரியர்கள் பணி இடைநீக்கம்!

கொழும்பு, டிசெ. 17

வடமத்திய மாகாணத்தில் போலியான கல்விச் சான்றிதழ்கள் மற்றும் நகல்களை சமர்ப்பித்து நியமனம் பெற்ற பட்டதாரி மற்றும் பயிற்சி ஆசிரியர்கள் 14 பேர் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளதாக வடமத்திய மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சிறிமேவன் தர்மசேன தெரிவித்தார்.

வடமத்திய மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் கடமையாற்றுவதற்காக கடந்த 1997ஆம் ஆண்டு தொடக்கம் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட 14 ஆசிரியர்களே பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

பணிநீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்கள் வடமத்திய மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் எட்டு முதல் 25 ஆண்டுகள் வரை பணியாற்றியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர்களாக பணியில் இணையும்போது சமர்ப்பிக்கப்பட்ட க.பொ.த சாதாரண தரம், க.பொ.த உயர்தரம் மற்றும் பட்டப்படிப்பு சான்றிதழ்கள் அனைத்தும் போலியானவை என கண்டறியப்பட்டுள்ளதாக பிரதி அமைச்சின் செயலாளர் சிறிமேவன் தர்மசேன தெரிவித்தார்.

மேலும் ,இந்த ஆசிரியர்களின் கல்விச் சான்றிதழ்கள் மற்றும் ஏனைய ஆவணங்களைச் சரிபார்க்க மாகாண பொதுச் சேவை ஆணைக் குழுவினால் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

பணி இடைநீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்களில் சிலர் ஆசிரியர் பட்டம் பெறுவதற்காக வெளிநாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்களின் போலி பட்டதாரிச் சான்றிதழ்களை சமர்ப் பித்துள்ளதாக வடமத்திய மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சிறிமேவன் தர்மசேன மேலும் தெரிவித்தார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரிசி தட்டுப்பாட்டுக்கு அரசாங்கமே காரணம்!

## கயந்த கருணாதிலக்க குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 17

**அரசி மாபியாவை நிறுத்துவதாக கூறிக்கொண்டு ஆட்சிக்கு வந்த அரசாங்கம் அரிசித்தட்டுப்பாட்டுக்கு காரண மாக அமைந்துள்ளதாக எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.**



ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-அரசி மாபியாவை நிறுத்த ஆணை வழங்குமாறு கூறி ஆட்சிக்கு வந்தனர்.ஆனால் அரசாங்கம் அரிசித் தட்டுப்பாட்டையே ஏற்படுத்தியுள்ளது. அத்துடன், ஜனாதிபதியின் இந்திய விஜயத்துக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றோம். ஜனாதிபதியின் இந்திய விஜயம் மற்றும் அதற்கான மாற்றம் வரவேற்கத்தக்க வகையில் அமைந்துள்ளது.

தேசியப் பட்டியல் ஆசனத்திற்கு காணப்பட்ட வெற்றிடம் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது. நாளை ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப்பட்டியல் உறுப்பினர்கள் பதவிப்பிரமாணம் செய்து கொள்வர்.

குறைந்த எண்ணிக்கையிலான ஆசனங்கள் கிடைக்கப் பெற்றுள்ள நிலையில் தான் தேசியப்பட்டியல் உறுப்பினர்களை தெரிவு செய்வதில் நெருக்கடி நிலை காணப்பட்டது. இப்போது அதனை முடிந்த அளவு நிவர்த்தி செய்துள்ளோம். அதற்கமையவே அவர்கள் நாளை நாடாளுமன்ற உறுப்பினர்களாக பதவிப்பிரமாணம் செய்யவுள்ளனர். கட்சியின் ஊடாகவே குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது-என்றார். (அ)

# மைத்திரிக்கு எதிரான மனுவை மீளப்பெற நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு, டிசெ. 17

சுதந்திரக் கட்சியின் தலைமை பதவி தொடர்பான வழக்கில் நீதிமன்றத்தை அவமதித்ததாகக் கூறி, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனுவை மீளப் பெற நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

குறித்த வழக்கு நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

சுதந்திரக் கட்சியின் செயற்குழு உறுப்பினர் மொன்டேக் சரத்சந்திரவினால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இதன்படி சுதந்திரக் கட்சியின் தலைவராக செயற்படுவதற்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பித்தபோதிலும், மைத்திரிபால சிறிசேன அந்த பதவியில் செயற்பட்டு நீதிமன்றத்தை அவமதித்துள்ளதாக மனுவில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த மனு நேற்று மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான நிஷங்க பந்துல கருணாரத்ன மற்றும் சஷி மகேந்திரன் ஆகியோர் அடங்கிய அமர்வு முன் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது, பிரதிவாதியான மைத்திரிபால சிறிசேன சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி மைத்திரி குணரத்ன, இனிமேல் சுதந்திரக் கட்சியின் தலைவர் பதவிக்கு தமது கட்சிக்காரர் போட்டியிட மாட்டார் என்று நீதிமன்றத்திற்கு அறிவித்தார்.

அந்த உண்மைகளின் அடிப்படையில் இந்த மனுவை தீர்ப்பதற்கு வாய்ப்பு இருப்பதாக சட்டத்தரணி நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.இந்நிலையில், மனுதாரர் சார்பில் முன்னிலையான சட் டத்தரணி சாந்த ஜயவர்தன, இந்த அறிவிப்பில் திருப்திய டைவதாகவும், சமர்ப்பிக்கப் பட்ட உண்மைகளின் அடிப்ப டையில் மனுவை தீர்ப்பதற்கு சம்மதிப்பதாகவும் நீதிமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

அதன்படி, மனுவை விசாரித்த மேல்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் மனுவை மீளப்பெற உத்தரவிட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# 2025 முதலாம் தவணை ஜனவரி 27இல் ஆரம்பம்

கொழும்பு, டிசெ. 17

2025ஆம் ஆண்டுக்கான பாடசாலை தவணை கால அட்டவணை தொடர்பான தகவல்களை கல்வியமைச்சு வெளியிட்டுள்ளது.

அதற்கமைய முதலாம் தவணை மூன்று கட்டங்களின் கீழ் இடம்பெறவுள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

எதிர்வரும் ஜனவரி மாதம் 27ஆம் திகதி முதல் முதல் மார்ச் மாதம் 14ஆம் திகதி வரை முதற் கட்டம் இடம்பெறும்.

ஏப்ரல் மாதம் முதலாம் திகதி முதல் 11ஆம் திகதி வரை இரண்டாம் கட்டம் இடம்பெறும்.

ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி முதல் மே மாதம் 9ஆம் திகதி வரை முதலாம் தவணையின் மூன்றாம் கட்ட கல்விச் செயற்பாடுகள் இடம் பெறுமென கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

இரண்டாம் தவணையானது மே மாதம் 14ஆம் திகதி முதல் ஓகஸ்ட் 07ஆம் திகதி வரை முன்னெடுக்கப்படும்.

மூன்றாம் தவணை இரண்டு கட்டங்களின் கீழ் இடம்பெறவுள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

அதற்கமைய ஓகஸ்ட் மாதம் 18ஆம் திகதி முதல் ஒக்ரோபர் 17ஆம் திகதி வரை முதலாம் கட்டம் இடம்பெறவுள்ளது.

நவம்பர் மாதம் 17ஆம் திகதி முதல் டிசெம்பர் மாதம் 19ஆம் திகதி வரை இரண்டாம் கட்ட கல்விச் செயற்பாடுகள் இடம் பெறவுள்ளன. (அ)

# சட்ட உயர்கல்வி தகைமையை மோசடியாக பெற்றார் நாமல்!

கொழும்பு, டிசெ. 17

பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ சட்டம் தொடர்பான தனது உயர்நிலை கல்வித் தகைமையை மோசடியான முறையில் பெற்றுக் கொண்டதாக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இலஞ்சம், ஊழல் தொடர்பான அதிகார சபையின் தலைவர் ஜமுனி காமந்ர துஷாரவினால் நேற்று குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் மேற்படி முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த ஜமுனி காமந்ர,

"பரீட்சை தினத்தன்று நாமல் ராஜபக்ஷ மோசடி நடவடிக்கையில் ஈடுபட்டதாக அன்றையதினம் அவருடன் பரீட்சைக்கு தோற்றிய இளைஞர் ஒருவர் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

குறித்த இளைஞர் அன்றைய தினம் பரீட்சை கடமையில் இருந்த மண்டபத் தலைவர், சட்டக்கல்லூரி அதிபர், பதிவாளர் உள்ளிட்ட பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

அவர்கள் முறைப்பாட்டை ஏற்றுக்கொண்டுள்ளனர். எனினும் இது தொடர்பான உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படாத காரணத்தால் தான் நீதியமைச்சின் அப்போதைய செயலாளர் சுஹத கம்லத்திடம் சென்றதாகவும், ஆனால் அவர் இந்த முறைப்பாட்டைக் கவனத்தில் கொள்ள மறுத்ததாகவும் தெரியவருகிறது.

அதன் பின்னர் அப்போதைய வாழைத்தோட்ட பொலிஸ் பொறுப்பதிகாரி உள்ளிட்ட அனைத்து திணைக்களங்களுக்கும் சென்று முறைப்பாடு செய்துள்ளார்.

இதன் பின்னர் குறித்த இளைஞன் தமது பாதுகாப்பு கருதி நாட்டை விட்டு வெளியேறியுள்ளார்.

இதனால் சாட்சியங்களை பெற்று முறையான விசாரணைகளை மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுகிறது.

இந்நிலையில் இது தொடர்பில் உரிய விசாரணைகளை மேற்கொள்ளுமாறு குற்றப்புலனாய்வு திணைக்களத்திடம் முறைப்பாடு செய்துள்ளேன்"- என்றார். (அ)

# வேலைக்கு வெளிநாடு சென்றவர்களின் எண்ணிக்கை 3 இலட்சத்தை தாண்டியது

கொழும்பு, டிசெ. 17

2024ஆம் ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் வெளிநாடு சென்ற இலங்கையர்களின் எண்ணிக்கை மூன்று இலட்சத்தை தாண்டியுள்ளது.

கடந்த 13ஆம் திகதி நிலவரப்படி, குறித்த எண்ணிக்கை 300,162 ஆகும்.

கடந்த 10 வருட காலப்பகுதியில் 3 இலட்சத்துக்கும் அதிகமான தொழிலாளர்கள் வெளிநாடுகளுக்குச் சென்ற இரண்டாவது தடவை இதுவாகும்.

இதற்கு முன்னர், 2022ஆம் ஆண்டில் 310,948 பேர் வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்காக வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர்.

2024 ஆம் ஆண்டில், 177,804 ஆண் மற்றும் 122,358 பெண் தொழிலாளர்கள் வேலைக்காக வெளிநாடு சென்றுள்ளனர்.

குறித்த காலப்பகுதியில் வெளிநாடுகளுக்குச் சென்ற மொத்த எண்ணிக்கையில் 40.7 வீதமான பெண்களும், ஆண் தொழிலாளர்கள் வெளிநாடுகளுக்குச் செல்வது 60 வீதத்தால் அதிகரித்துள்ளது.

184,140 பேர் சொந்தமாக வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளதுடன், 116, 022 பேர் வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்கள் ஊடாக வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர்.

பெரும்பாலான இலங்கையர்கள் குவைத் நாட்டுக்கு வேலைக்காக சென்றுள்ள நிலையில் அதன் எண்ணிக்கை 73,995 ஆகும்.

இரண்டாவதாக அதிகளவான இலங்கையர்கள் ஐக்கிய அரபு அமீரகத்திற்கு சென்றுள்ளதுடன் அந்த எண்ணிக்கை 49,499 ஆகும்.

கடந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில், இலங்கையர்கள் தென் கொரியா, இஸ்ரேல், ருமேனியா மற்றும் ஜப்பான் போன்ற நாடுகளுக்கு வேலைகளுக்குச் செல்வதில் அதிக நாட்டம் காட்டி வருவதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

அதன்படி, 2024ஆம் ஆண்டு தென் கொரியாவுக்கு 7,002 இலங்கையர்களும், இஸ்ரேலுக்கு 9,211 பேரும், ருமேனியாவுக்கு 10,274 பேரும், ஜப்பானில் வேலை வாய்ப்புக்காக 8,251 பேரும் வெளியேறியுள்ளனர்.

இந்நிலையில், 2024 ஆம் ஆண்டின் இறுதிக்குள், வேலை வாய்ப்புக்காக வெளிநாடு செல்லும் இலங்கையர்களின் எண்ணிக்கை 311,000 ஐ தாண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

# புத்தளத்தில் உப்பு உற்பத்தி பாதிப்பு

கொழும்பு, டிசெ. 17

நாடளாவிய ரீதியில் நிலவி வரும் பலத்த மழை காரணமாக புத்தளத்தில் உப்பு உற்பத்தியில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

புத்தளத்தில் காணப்படும் உப்பளமானது அண்மைக் காலம் வரையில் நாட்டின் மொத்த உற்பத்தி பங்களிப்பில் 45 வீதத்துக்கும் அதிகமான பங்களிப்பை வழங்கி வருகிறது.

புத்தளம் மாவட்டத்தின் புத்தளம், கல்பிட்டி, வனாத்தவில்லு, முந்தலம் ஆகிய பிரதேச செயலகப் பகுதிகளில் சுமார் 4000 ஹெக்ரேயர் பரப்பளவில் 2,000 இற்கும் மேற்பட்டோர் உப்புத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை, இத்தொழில் மூலம் நேரடியாகவும் மறைமுகமாகவும் வேலை வாய்ப்பு பெற்ற குடும்பங்களின் எண்ணிக்கை 20,000 ஐ தாண்டியுள்ளது.

இலங்கையின் உப்பு நுகர்வு ஒரு இலட்சத்து இருபத்தைந்தாயிரம் மெற்றிக் தொன் ஆகும்.

அதில் புத்தளம் மாவட்டத்தில் இருந்து கடந்த வருடங்களில் 46,000 மெற்றிக் தொன் உற்பத்தி கிடைத்துள்ளது.

எனினும், இந்த நிலை 2023ஆம் ஆண்டுக்கு பின்னர் 40 வீதத்துக்கும் குறைவாகவே காணப்படுகிறது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களுக்கு எதிரான வன்முறைகளை உடனடியாக நிறுத்த உதவி செய்யுங்கள்

## பெண் மனித உரிமை பாதுகாவலர் அமைப்பு ஜனாதிபதி அநுரகுமாரவிடம் கோரிக்கை

மட்டக்களப்பு, டிசெ.17

**இலங்கையில் பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கி, ஏற்றுக்கொண்ட சீடோ சமவாயத்தின் அடிப்படையில் புதிய சட்டமூலத்தை கொண்டுவருவதன் ஊடாக பெண்களுக்கு எதிரான வன்முறைகளையும் பாரபட்சங்களையும் நிறுத்த உடனடியாக உதவுங்கள் என கிழக்கு மாகாண பெண் மனித உரிமை பாதுகாவலர் அமைப்பு, ஜனாதிபதி அநுரகுமாரவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.**

ஊடகச் சந்திப்பில் அந்த அமைப்பினர் மேலும் கூறுகையில்,இலங்கையின் அனைதது் பெண்களும் இன, மத, சமூக வேறுபாடுகளைக் கடந்து ஆணாதிக்க அடக்குமுறைகளையும் வன்முறைகளை யும் எதிர்கொண்டு வருகின்ற னர்.

ஆணாதிக்க மயப்பட்ட குடும்ப, சமூக, வேலைத்தள, அரச அடக்குமுறைகளுக்கு இலங்கைப் பெண்கள் அனைவருமே உள்ளாகின்றனர்.

இணையவழிக் குற்றங்கள் அதிகரித்துள்ளன. குறிப்பாக பாடசாலை மாணவிகள் மீதான பாலியல் இம்சைகள், வன்முறைகளால் சிறுமிகளே அதிகம் பாதிக்கப்படுகின்றனர். எனினும், காத்திரமான சட்ட ஏற்பாடுகள் இல்லாத காரணத்தால் தவறு செய்கின்றவர்கள் தப்பித்துக் கொள்கின்ற நிலைதான் தற்போதும் இருக்கின்றது.

இருந்த போதும், கடந்த 2018ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 4ஆம் திகதி தொடக்கம் மே மாதம் வரையான காலப்பகுதியில் திருகோணமலை சம்பூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் உள்ள 15 வயதுடைய சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய 41 வயதான நபருக்கு 30 வருட கடூழியச் சிறைத் தண்டனை விதித்ததுடன், பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 3 இலட்சம் ரூபாய் நஷ்டஈடு வழங்குமாறும் திருகோணமலை மேல் நீதிமன்றம் கடந்த 11 ஆம் திகதி தீர்ப்பு வழங்கியதை எமது கிழக்கு மாகாண பெண் மனித உரிமை பாதுகாவலர் அமைப்பு வரவேற்கிறது.

இலங்கையில் இடம்பெறுகின்ற பெண்கள் மீதான வன்முறைகளை நிறுத்துவதற்கான சட்டங்களை விரிவுபடுத்துவதுடன், சட்டங்களில் சீர்திருத்தங்களை உடன் மேற்கொண்டு உதவுமாறும், அத்துடன் ஏற்றுக்கொள்ளப்பட்ட பெண்களுக்கு எதிரான எல்லா விதமான பாரபட்சங்களையும் இல்லாது ஒழிக்கும் (சீடோ) சமவாயத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்களை முழுமையாக இலங்கையில் நடைமுறைப்படுத்துவதற்காக புதியதொரு சட்ட மூலத்தை உருவாக்குமாறும் கோரிக்கை விடுக்கின்றோம்.

இலங்கையின் வடக்கு - கிழக்கு பிரதேசங்களில் பெண் மனித உரிமைச் செயல்பாட்டாளர்களுக்கு எதிராக இடம்பெறும் விசாரணைகளை உடன் நிறுத்த வேண்டும்.

இலங்கையில் நடைமுறையில் இருக்கும் பயங்கரவாதத் தடை சட்டத்தை நீக்குமாறும், மேலும் அரசுக்கு எதிரான குற்றச் செயல்களை கையாள்வதற்கு போதிய சட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன என்ற அடிப்படையில் பயங்கரவாதத் தடை சட்டத்துக்குப் பதிலாக புதிய சட்டத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்ற வேண்டாம் என்றும் கேட்டுக்கொள்கின்றோம் என தெரிவித்தனர். (எ)

# எலிக்காய்ச்சல் மற்றும் டெங்கு நோய்த்தடுப்பு நடவடிக்கைகள்

## அட்டாளைச்சேனையில் மும்முரம்

அட்டாளைச்சேனை, டிசெ. 17

நாட்டில் தற்போதைய காலகட்டத்தில் ஏற்பட்டு வரும் எலிக் காய்ச்சல் மற்றும் டெங்கு நோய் போன்றவற்றில் இருந்து பாதுகாப்பு பெறும் வகையில் அட்டாளைச்சேனை தேசிய கல்வியியற் கல்லூரியில் விசேட சிரமதானம் நடைபெற்றது.



அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ், அட்டாளைச்சேனை பிரதேச சபையுடன் இணைந்து இச்சிரமதான வேலைத் திட்டம் கல்லூரியின் பீடாதிபதி கே. புண்ணிய மூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

இந்த வேலைத் திட்டத்தில் உப பீடாதிபதி எம். சி. ஜுனைட், கல்வியியற் கல்லூரியில் பயின்று வரும் பெருந் தொகையான ஆசிரிய பயிலுநர்கள், சுகாதாரத் துறையினர், விரிவுரையாளர்கள், கல்விசாரா உத்தியோகத்தர்கள் எனப் பலர் இந்தச் சிரமதான பணியில் ஈடுபட்டனர்.

இதன்போது கல்வியியற் கல்லூரின் சுற்றுவட்டாரத்தில் உள்ள வடிகான்கள், கால் வாய்கள், நீரேந்து பிரதேசங்கள் போன்றன சுத்தப்படுத்தப்பட்டு டெங்கு நுளம்புகள் பெருகும் சூழலும், எலிகள் நடமாடும் இடங்கள் போன்றன சுத்தம் செய்யப்பட்டன.

இதேவேளை, கல்லூரியை அண்டிய பிரதேசத்தில் பற்றைக் காடுகளாய் சுற்றாடலுக்கு கேடு விளைவிக்கத் தக்க வகையில் வளர்ந்து காணப்பட்ட மரம் செடி கொடிகள் புற் பூண்டுகள் பொன்றன அழித் தொழிக்கப்பட்டு துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

இதுதவிர டெங்கு நுளம்புகளின் தாக்கம் பற்றியும், எலிக் காய்ச் சலின் கேடுகள் தொடர்பிலும் விசேட ஆலோசனைகள் சுகாதாரத் துறையினரால் வழங்கப்பட்டன. (எ)

# சிங்கள பாட நெறியை பூர்த்தி செய்த உத்தியோகத்தர்களுக்கு சான்றிதழ்






அட்டாளைச்சேனை, டிசெ. 17

100 மணித்தியாலங்கள் சிங்கள பாட நெறியைப் பூர்த்தி செய்த உத்தியோகத்தர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அட்டாளைச்சேனை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் பிரதேச செயலாளர் பி. ரி. எம். இர்பான் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஜே. ஜெகராஜன் கலந்து கொண்டார். உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஏ. எல். ஏ. மஜீட், நிர்வாக உத்தியோகத்தர் கே. பி. சலீம், சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஏ. எல். எம். ஹமீட், மாவட்ட உளவளத் துணை உத்தியோகத்தர் அபூவக்கர் மனூஸ், பாட போதனாசிரியர் எம். எம். பாஸில், திட்டமிடல் பிரிவு பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ஜே. பரமநிதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ. எம். முஹம்மட் றிஸான் போன்றோர் கலந்துகொண்டனர்.

மேலும், மாவட்ட மேலதிக அரசாங்க அதிபருக்கு பிரதேச செயலாளர் நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவித்தார். (எ)

# ஜும்ஆ தினங்களில் ஒருங்கிணைப்புக்குழு கூட்டங்கள் நடத்துவதை தவிர்க்க வேண்டும்

## உதுமாலெப்பை எம். பி. கோரிக்கை

கல்முனை, டிசெ. 17

அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் ஜும்ஆ தினங்களில் நடத்துவதில்லை என்று தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கும் நிலையில் ஜும்ஆ தினத்தில் அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடைபெற்றது குறித்து தனது கண்டனத்தை வெளியிட்ட சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் எம். எஸ். உதுமாலெப்பை, இனிவரும் காலங்களில் ஜும்ஆ தினங்களில் ஒருங்கிணைப்புக்குழு கூட்டங்கள் நடத்துவதை தவிர்க்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் பிரதி அமைச்சர் வசந்த பியதிஸ்ஸ தலைமையில் நடைபெற்ற போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,ஜும்ஆ தினத்தில் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளும் முஸ்லிம் பாராளுமன்ற

உறுப்பினர்களும் முஸ்லிம் திணைக்களத் தலைவர்களும் பல கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளதுடன் எதிர்காலங்களில் ஜும்ஆ தினங்களில் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் நடத்துவதை தவிர்க்குமாறு கேட்டுக்கொண்டார்.



இதற்குப் பதிலளித்த பிரதி அமைச்சர் வசந்த பியதிஸ்ஸ மற்றும் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்கிரம ஆகியோர் எதிர்வரும் காலங்களில் வெள்ளிக்கிழமை தினங்களில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடத்தப்படுவதை தவிர்த்துக் கொள்வதாகவும், இது தொடர்பில் ஏற்பட்ட அசௌகரியங்களுக்கு தாங்கள் மனம் வருந்துவதாகவும் கூறினர். (எ)

# ரணவீம நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் காரைதீவில் வீடுகள் கையளிப்பு



காரைதீவு, டிசெ. 17

காரைதீவு பிரதேச செயலக சமுர்த்தி பிரிவினால் “ரணவீம” நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் காரைதீவு 4ஆம், 9ஆம் கிராம உத்தியோ கத்தர் பிரிவு களில் நிர்மா ணிக்கப்பட்ட வீடுகள் பயனா ளிகளிடம் கையளிக்கப் பட்டன. இந்த நிகழ்வு காரை தீவு பிரதேச செயலாளர் ஜீ. அருணன் தலைமையில் நடை பெற்றது.

இதில் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிவஞானம் ஜெகராஜன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு “ரணவீம” நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளை திறந்து வைத்தார்.

காரைதீவு உதவிப் பிரதேச செயலாளர் எஸ். பார்த்திபன், சமுர்த்தி தலைமை பீட முகாமையாளர் ஏ. எம். அச்சு முஹமட், பிரதேச செயலக தொழில்நுட்ப உத்தியோகத்தர் மற்றும் சமுர்த்தி முகாமைத்துவ பணிப்பாளர் ரீ. தவேந்திரன், பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உக்ரைனை உருக்குலைக்கும் ரஷ்யா மின் கட்டமைப்புமீது கடும் தாக்குதல்

கீவ், டிசெ.17

**மின் உற்பத்தி கட்டமைப்பை இலக்கு வைத்து, உக்ரைன் மீது ரஷ்ய இராணுவம் மிகப்பெரிய அளவில் வான்வழித் தாக்குதலை நடத்தியுள்ளது.**

ரஷ்யா - உக்ரைன் இடையிலான போர் 2 ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்து வருகிறது. இந்தப் போரின் தொடக்கத்தில் உக்ரைனின் பல்வேறு நகரங்களை ரஷ்ய இராணுவம் அதிரடியாக கைப்பற்றியது. அதே சமயம் உக்ரைனுக்கு பல்வேறு மேற்கத்திய நாடுகள் ஆயுதம் மற்றும் பொருளாதார உதவிகளை செய்து வரும் நிலையில், ரஷ்யாவின் தாக்குதலுக்கு உக்ரைன் இராணுவம் தொடர்ந்து பதிலடி கொடுத்து வருகிறது.

இதன் தொடர்ச்சியாக உக்ரைன் மீது ரஷ்ய இராணுவம் நேற்று மிகப்பெரிய அளவில் வான்வழித் தாக்குதலை நடத்தியுள்ளது. குறிப்பாக உக்ரைனின் மின் உற்பத்தி கட்டமைப்பை இலக்கு வைத்து தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக உக்ரைன் எரிசக்தி துறை அமைச்சர் ஹெர்மன் ஹாலுஸ்சென்கோ தெரிவித்துள்ளார். அதிநவீன ட்ரோன்கள் மற்றும் ஏவுகணைகளை கொண்டு இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் உக்ரைனின் வான்பரப்பில் பல்வேறு முறை ஏவுகணைகள் வீசப்பட்டதாக உக்ரைன் விமானப்படை தெரிவித்துள்ளது. குறிப்பாக உக்ரைனின் மேற்கு பகுதிகளில் பாலிஸ்டிக் கின்ஸல் ஏவுகணைகள் மூலம் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மயோட்டே தீவை தாக்கிய புயல் 11 பேர் பலி, 200 பேர் படுகாயம்!

மமுத்சொ, டிசெ. 17



மயோட்டே தீவை தாக்கிய புயலில் சிக்கி 11 பேர் உயிரிழந்தனர். இந்திய பெருங்கடலில் அமைந்துள்ள தீவு மயோட்டே. இந்த தீவு பிரான்சின் கட்டுப்பாட்டில் உள்ளது. 3 இலட்சத்து 20 ஆயிரம் பேரை மக்கள்தொகையாக கொண்டுள்ள மயோட்டே தீவு, மடகாஸ்கர் நாட்டின் அருகே அமைந்துள்ளது.

இந்த நிலையில், மயோட்டே தீவை சிண்டோ என்ற புயல் தாக்கியது. கனமழையுடன் வீசிய இந்த புயலால் பல வீடுகள் சேதமடைந்தன. மின்கம்பங்கள், வீதிகள், கட்டடங்கள் உட்பட பல்வேறு உட்கட்டமைப்புகள் கடுமையாக பாதிக்கப்பட்டன.

அதேவேளை, இந்த புயலில் சிக்கி 11 பேர் உயிரிழந்தனர். மேலும் 200இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். புயல் தாக்கிய மயோட்டே தீவுக்குத் தேவையான நிவாரண உதவிகளை பிரான்ஸ் அரசு துரிதப்படுத்தியுள்ளது. (எ)

# பிரபல தபேலா கலைஞர் ஜாகிர் உசேன் காலமானார்

வாஷிங்டன், டிசெ.17



உலகப் புகழ்பெற்ற தபேலா இசைக் கலைஞர் ஜாகிர் உசேன் உடல்நலக்குறைவால் காலமானார். அவருக்கு வயது - 73.

இந்தியாவை சேர்ந்த பிரபல தபேலா இசைக்கலைஞர் ஜாகிர் உசேன். மும்பையைச் சேர்ந்த இவர் பல்வேறு திரைப்படங்களில் தபேலா இசை அமைத்துள்ளார். மேலும், இசைக்கச்சேரிகளிலும் பங்கேற்று பிரபலமடைந்தார்.


ஜாகிர் உசேன் 4 முறை கிராமி விருதுகளை வென்றுள்ளார். இவருக்கு இந்திய மத்திய அரசு பத்மசிறி, பத்மபூஷன், பத்மவிபூஷன் உள்ளிட்ட விருதுகளை வழங்கி கௌரவித்துள்ளது. ஜாகிர் உசேன் அமெரிக்காவில் வசித்து வந்தார்.

இந்த நிலையில், ஜாகிர் உசேனுக்கு திடீர் நெஞ்சுவலி ஏற்பட்டது. இதையடுத்து அவர் கடந்த வாரம் சான்பிரான்சிஸ்கோவில் உள்ள மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.(எ)

# ஜனாதிபதி பதவி நீக்கம் தீர்மானம் நிறைவேற்றம்

## தென்கொரிய பாராளுமன்றில் எதிர்க்கட்சி ஆதிக்கம்

சியோல், டிசெ. 17



தென்கொரிய ஜனாதிபதியை பதவி நீக்கம் செய்யும் தீர்மானம் அந்த நாட்டின் பாராளுமன்றத்தில் நிறைவேறியுள்ளது.

தென்கொரியாவில் கடந்த 3ஆம் திகதி ஜனாதிபதி யூன் சுக் இயோல் திடீரென இராணுவ அவசர நிலையை பிரகடனப்படுத்தினார்.

இது தொடர்பாக தொலைக்காட்சியில் உரையாற்றிய யூன் சுக் இயோல், வடகொரிய கம்யூனிஸ்ட் படைகளின் அச்சுறுத்தல் காரணமாக தென் கொரியாவில் அவசர நிலை பிரகடனம் செய்யப்படுவதாக தெரிவித்து பரபரப்பை ஏற்படுத்தினார்.

இந்த அறிவிப்புக்கு எதிர்க்கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்தன. பின்னர் மக்களின் கடும் எதிர்ப்பால் அவசர நிலையை தென்கொரிய ஜனாதிபதி வாபஸ் பெற்றார். இதனைத் தொடர்ந்து ஜனாதிபதி யூன் சுக் இயோலை பதவிநீக்கம் செய்யும் தீர்மானத்தை தென்கொரிய பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் தாக்கல் செய்தன.

ஆனால், அந்தத் தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பை ஆளுங்கட்சியினர் புறக்கணித்ததால், தீர்மானம் தோல்வியடைந்தது. இதனைத் தொடர்ந்து ஜனாதிபதியை பதவிநீக்கம் செய்ய அந்த நாட்டின் பிரதான எதிர்க்கட்சியான ஜனநாயக கட்சி மற்றும் 5 சிறிய கட்சிகள் இணைந்து மீண்டும் புதிய தீர்மானத்தை தாக்கல் செய்தன. இந்தத் தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பு நடைபெற்றது.

இதில் 204 எம். பிக்கள் தீர்மானத்துக்கு ஆதரவாகவும், 85 எம்.பிக்கள் எதிராகவும் வாக்களித்தனர். இதன்படி, தென்கொரிய ஜனாதிபதியை பதவிநீக்கம் செய்யும் தீர்மானம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. தொடர்ந்து இந்தத் தீர்மானத்தின் பிரதி ஜனாதிபதி யூன் சுக் இயோலுக்கும், அந்த நாட்டின் அரசியலமைப்பு நீதிமன்றத்துக்கும் அனுப்பி வைக்கப்படும்.

இதைத் தொடர்ந்து 180 நாட்களுக்குள், ஜனாதிபதியை பதவிநீக்கம் செய்வதா? அல்லது அவருக்கான அதிகாரத்தை திரும்ப வழங்குவதா? என்பதை நீதிமன்றம் முடிவு செய்யும். ஒருவேளை ஜனாதிபதி பதவிநீக்கம் செய்யப்பட்டால், அடுத்த 60 நாட்களுக்குள் புதிய ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான தேர்தல் நடத்தப்படவேண்டும். (எ)

# திருவிழாவில் குண்டுவெடிப்பு 3 பேர் பலி, 50 பேர் படுகாயம்!

பாங்கொக், டிசெ. 17

தாய்லாந்தில் நடந்த திருவிழாவின்போது திடீரென குண்டு வெடித்ததில் மூவர் பலியாகினர். 50 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

தாய்லாந்தின் தக் மாகாணம் உம்பாங் நகரில் வருடாந்திர திருவிழா நடைபெற்றது. இதில் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர். அப்போது, விழாவில் கலந்து கொண்ட இரு தரப்பினர் இடையே கைகலப்பு ஏற்பட்டது. இதனால், ஆத்திரமடைந்த சிலர் அந்தக் கூட்டத்தை நோக்கி வெடி குண்டு வீசினர். அது பயங்கர சத்தத்துடன் வெடித்து சிதறியதால் அங்கிருந்தவர்கள் நாலா புறமும் சிதறியோடினர்.

இந்த குண்டுவெடிப்பில் 3 பேர் உடல் சிதறிப் பலியாகினர். 50இற்கும் மேற்பட்டோருக்கு படுகாயம் ஏற்பட்டது. மீட்புப் படையினர் அவர்களை மீட்டு மருத்துவமனையில் சேர்த்தனர். அவர்களில் பலர் ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருவதால் பலி எண்ணிக்கை அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது. (எ)

# ட்ரம்ப்புக்கு 15 மில்லியன் அமெரிக்க டொலர் நட்டஈடு

வாஷிங்டன், டிசெ. 17

அமெரிக்க ஜனாதிபதியாகத் தெரிவாகியுள்ள டொனால்ட் ட்ரம்ப்புக்கு அவதூறு ஏற்படுத்தியமைக்காக சர்வதேச ஊடக நிறுவனமொன்று அவருக்கு 15 மில்லியன் அமெரிக்க டொலரை நட்டஈடாக வழங்குவதற்கு ஒப்புக் கொண்டுள்ளது.

கடந்த மார்ச் 10ஆம் திகதி நேர்காணல் ஒன்றின்போது குறித்த ஊடக நிறுவனத்தின் நெறியாளர் டொனால்ட் ட்ரம்புக்கு எதிரான பாலியல் குற்றச்சாட்டொன்று தொடர்பில் அவதூறான கருத்துக்களை வெளியிட்டார்.

எவ்வாறாயினும் டொனால்ட் ட்ரம்ப் மீதான பாலியல் குற்றச்சாட்டு தொடர்பில் நியூயோர்க் நீதிமன்றம் தீர்ப்பை அறிவித்தது. அதில் அவருக்கு எதிரான குற்றம் நிரூபிக்கத் தவறியதாகத் தீர்ப்பளிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், டொனால்ட் ட்ரம்ப் மீதான அவதூறு தொடர்பில் குறித்த நெறியாளர் வருத்தம் தெரிவித்த அதே வேளை தொடர்புடைய ஊடக நிறுவனம் நட்டஈடு வழங்குவதற்கும் ஒப்புக்கொண்டுள்ளது.

# “ஏஐ எம்மை அடிமையாக்கும்”

மும்பை, டிசெ. 17

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் (ஏஐ) நம் கட்டுப்பாட்டில் இருந்து விலகி நம்மை அதன் அடிமையாக்கும் என வரலாற்றுத் துறை பேராசிரியரும், எழுத்தாளருமான யுவால் நோவா ஹராரி தெரிவித்தார்.

‘நெக்சஸ்: கற்காலம் முதல் செயற்கை நுண்ணறிவு வரையிலான தகவல் பரிமாற்ற அமைப்பு முறைகளின் ஒரு சுருக்கமான வரலாறு’ என்ற அவரது புதிய புத்தகம் தகவல்களைக் குறித்து பேசுகிறது. இந்த நிலையில், மும்பையில்



உள்ள நட்சத்திர விடுதி ஒன்றில் நடந்த நிகழ்வில் ஏ ஐ குறித்து தனது பார்வையை யுவால் நோவா ஹராரி முன்வைத்தார்.

“ஏஐ நமது கட்டுப்பாட்டில் இருந்து நம்மை அதன் அடிமையாக்கும் வாய்ப்பு உள்ளது. ஏனெனில், ஏஐ என்பது கருவி அல்ல. அதுவொரு முகவர். ஒரு புத்தகமோ அல்லது அச்சகமோ நம் கட்டுப்பாட்டில் இருந்து தப்பாது. அச்சகத்தால் புதிய புத்தகத்தை உருவாக்க முடியாது. ஆனால், ஏஐ அதை செய்யும். எழுத்துருவாக்கம், செய்திகள் மற்றும் வீடியோ உள்ளிட்டவற்றை ஏஐ உருவாக்கும் திறன் கொண்டுள்ளது.

சுயமாக கற்று, அதற்கான மாற்றத்துக்கு செல்லும் தன்மையை ஏஐ கொண்டுள்ளது. அதனால், தான் அதை கட்டுப்படுத்துவது கடினம் என்று சொல்கிறேன்”- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாவது டெஸ்ட் முதல் இன்னிங்ஸில் அவுஸ்திரேலியா 445 ஓட்டங்கள் குவிப்பு

## 51 ஓட்டங்களுக்கு 4 விக்கெட் இழந்து இந்தியா தடுமாற்றம்



பிரிஸ்பேன், டிசெ.17

இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலியா தனது முதல் இன்னிங்ஸில் 445 ஓட்டங்கள் குவித்துள்ளது. இதேவேளை, முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிவரும் இந்தியா 51 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்கள் இழந்து தடுமாறி வருகிறது.

இந்தியா - அவுஸ்திரேலியா அணிகள் இடையிலான 3ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி பிரிஸ்பேனில் உள்ள மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா 445 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது.

நேற்று முன்தினம் ஆட்டநேர முடிவில் அந்த அணி முதல் இன்னிங்ஸில் 101 ஓவர்களில் 7 விக்கெட்கள் இழந்து 405 ஓட்டங்கள் எடுத்திருந்தது. இந்த நிலையில் 3ஆவது நாள் ஆட்டம் நேற்று நடைபெற்றது.

சிறப்பாக விளையாடி வந்த அலெக் ஹெரி 70 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். இறுதியில் அவுஸ்திரேலிய அணி 117. 1 ஓவர்களில் 445 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்தது. இந்திய தரப்பில் ஜஸ்பிரீத் பும்ரா 6 விக்கெட்களை வீழ்த்தினார். இதனைத் தொடர்ந்து இந்திய அணி தனது முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி வருகிறது. அந்த அணி நேற்றைய நாள் ஆட்டநேர முடிவில் 51 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்கள் இழந்துள்ளது. இந்திய அணி துடுப்பெடுத்தாட ஆரம்பித்து சில மணி நேரத்தில் மழை பெய்தது. இதனால் ஆட்டம் தற்காலிகமாக தடைப்பட்டது. பின்பும் மழை பெய்யத் தொடங்கியதால் நேற்றைய நாள் ஆட்டம் நிறுத்தப்பட்டது. (எ)

# மகளிர் ஜூனியர் ஹொக்கி சம்பியனானது இந்திய அணி




மஸ்கட், டிசெ. 17

மகளிர் ஜூனியர் ஆசிய கிண்ண ஹொக்கி போட்டியில் இந்திய அணி சம்பியனானது.

9ஆவது மகளிர் ஜூனியர் ஆசிய கிண்ண ஹொக்கி போட்டி (21 வயதுக்கு உட்பட்டோர்) ஓமன் தலைநகர் மஸ்கட்டில் நடைபெற்றது. இதன் இறுதிப் போட்டியில் இந்தியா - சீனா அணிகள் மோதின.

பரபரப்பான இந்த ஆட்டத்தில் இந்திய அணி 4 - 2 என்ற கோல் கணக்கில் சீனாவை வென்று சம்பியனானது. (எ)

# கபில்தேவ் சாதனையை முறியடித்தார் பும்ரா



பிரிஸ்பேன், டிசெ.17

இந்திய அணியின் முன்னாள் தலைவர் கபில்தேவ் சாதனையை ஜஸ்பிரீத் பும்ரா முறியடித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவுக்கு சென்றுள்ள இந்திய கிரிக்கெட் அணி 5 போட்டிகள் கொண்ட பார்டர் - கவாஸ்கர் கிண்ண டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது.

இதில், தற்போது நடைபெற்று வரும் மூன்றாவது டெஸ்ட் போட்டியில் முதல் இன்னிங்ஸில் 6 விக்கெட்கள் வீழ்த்திய பும்ரா, கபில்தேவ் சாதனையை முறியடித்துள்ளார்

டெஸ்ட் இன்னிங்ஸில் பும்ரா 5 விக்கெட்கள் எடுப்பது இது 12ஆவது முறையாகும். அதேசமயம் ஆசிய கண்டத்துக்கு வெளியே அவர் ஓர் இன்னிங்ஸில் 5 விக்கெட்கள் வீழ்த்தியது இது 10ஆவது முறையாகும். இதற்கு முன்பு இந்திய பந்து வீச்சாளர்களில் கபில்தேவ், ஆசியாவுக்கு வெளியே 9 முறை 5 விக்கெட்கள் எடுத்ததே சாதனையாக இருந்தது. அந்தச் சாதனையை பும்ரா தற்போது முறியடித்துள்ளார். (எ)

சம்பியன் பட்டம் வென்ற

# இந்திய வீராங்கனைகளுக்கு தலா 2 இலட்சம் ரூபாய் பரிசு

மஸ்கட், டிசெ. 17

ஜூனியர் ஆசிய ஹொக்கி சம்பியன் பட்டம் வென்ற இந்திய வீராங்கனைகளுக்கு தலா 2 இலட்சம் ரூபாய் பரிசுத்தொகை அறிவிக்கப்பட்டுள்ளது.

9ஆவது மகளிர் ஜூனியர் ஆசிய கிண்ண ஹொக்கி போட்டி (21 வயதுக்கு உட்பட்டோர்) ஓமன் தலைநகர் மஸ்கட்டில் நடைபெற்றது. இதில் இந்திய அணி 4 - 2 என்ற கணக்கில் சீனாவை வென்று சம்பியன் பட்டம் வென்று அசத்தியது.

இந்த நிலையில், ஜூனியர் ஆசிய கிண்ணம் வென்ற இந்திய மகளிர் அணியை ஊக்குவிக்கும் வகையில் இந்திய ஹொக்கி சம்மேளனம் பரிசுத்தொகை அறிவித்துள்ளது.

இதன்படி, இந்திய மகளிர் அணியில் இடம்பிடித்த ஒவ்வொரு வீராங்கனைகளுக்கும் தலா 2 இலட்சம் ரூபாய் எனவும், ஆதரவு ஊழியர்கள் அனைவருக்கும் தலா ஓர் இலட்சம் ரூபாய் வழங்கப்படும் எனவும் அறிவித்துள்ளது. (எ)

# இந்தியாவில் 2025 இல் உலக தடகளப்போட்டி

புதுடில்லி, டிசெ.17

உலக தடகள போட்டி இந்தியாவில் நடைபெறவுள்ளது என்று இந்திய தடகள சம்மேளனம் அறிவித்துள்ளது. இது குறித்து வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில், இந்தப் போட்டியானது ஒடிசா மாநிலத் தலைநகர் புவனேஸ்வரில் அடுத்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் 10ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளது. உலகத் தடகளப் போட்டியாக இது இருந்தாலும் இந்தியாவில் நடைபெறும் பிரிவானது வெண்கலப் பதக்கங்களுக்கான போட்டியாக மட்டுமே இருக்கும். இந்தியாவில் உலகத் தடகளப் போட்டியானது 1980களின் இறுதியிலும், 1990 களின் தொடக்கத்திலும் இதற்கு முன்பு நடைபெற்றது. பல ஆண்டுகளுக்குப் பிறகு உலகத் தடகளப் போட்டியின் ஒரு பிரிவு இந்தியாவில் நடைபெறவுள்ளது- இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# 49 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்திய அணி அசத்தல் வெற்றி



மும்பை, டிசெ. 17

மேற்கு இந்திய தீவுகள் அணிக்கு எதிரான முதல் ரி - 20 போட்டியில் 49 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்திய அணி வெற்றி பெற்றது.

மேற்கு இந்திய தீவுகள் மகளிர் கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 ரி - 20 மற்றும் 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. இதில் முதலில் ரி - 20 போட்டிகள் நடைபெறுகின்றன.

இரு அணிகளுக்கும் இடையிலான முதல் ரி - 20 போட்டியில் நடைபெற்றது. இந்த ஆட்டத்துக்கான நாணயச்சுழற்சியில் வென்ற மேற்கு இந்திய தீவுகள் அணி களத்தடுப்பை தெரிவு செய்தது. இதையடுத்து இந்தியாவின் தொடக்க வீராங்கனைகளான ஸ்மிருதி மந்தனா மற்றும் உமா செத்ரி ஆகியோர் களமிறங்கினர். இதில் உமா செத்ரி 24 ஓட்டங்களிலும், ஸ்மிருதி மந்தனா அரைச்சதம் அடித்த நிலையில் 54 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். தொடர்ந்து ஜெமிமா ரோட்ரிக்ஸ் மற்றும் ரிச்சா கோஷ் ஆகியோர் ஜோடி சேர்ந்தனர்.

இருவரும் அதிரடியாக ஆடி ஓட்டங்கள் சேர்த்தனர்.இதில் ரிச்சா கோஷ் 20 ஆட்டமிழந்தார். தொடர்ந்து ஹர்மன்ப்ரீத் கவுர் களம் புகுந்தார். மறுமுனையில் அதிரடியாக ஆடிய ரோட்ரிக்ஸ் அரைச்சதம் அடித்து அசத்தினார். இறுதியில் இந்திய அணி 20 ஓவர்களில் 4 விக்கெட்கள் மட்டும் இழந்து 195 ஓட்டங்கள் குவித்தது. இந்தியா தரப்பில் அதிகபட்சமாக ஜெமிமா ரோட்ரிக்ஸ் 73 ஓட்டங்கள் எடுத்தார். மேற்கு இந்திய தீவுகள் தரப்பில் கரிஷ்மா ராம்ஹராக் 2 விக்கெட்கள் வீழ்த்தினார். இதையடுத்து 196 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் மேற்கு இந்திய தீவுகள் அணி விளையாடியது .

தொடக்கம் முதல் இந்திய அணியின் பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் மேற்கு இந்திய தீவுகள் அணி தடுமாறியது. அந்த அணி 20 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்கள் இழப்புக்கு 146 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. இதனால் 49 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்திய அணி வெற்றி பெற்றது. இந்த வெற்றியால் 3 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரில் 1 - 0 என இந்திய அணி முன்னிலை பெற்றுள்ளது. (எ)

# இங்கிலாந்துக்கு இமாலய இலக்கை நிர்ணயித்து நியூசிலாந்து ஆதிக்கம்

ஹாமில்டன், டிசெ.17

இங்கிலாந்து அணிக்கு 659 ஓட்டங்களை வெற்றி இலக்காக நிர்ணயித் துள்ளது நியூசிலாந்து அணி. இந்த நிலையில் 18 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களை இழந்து இங்கிலாந்து தடுமாறி வருகிறது. இங்கிலாந்து கிரிக்கெட் அணி நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் முதல் இரு போட்டிகளில் இங்கிலாந்து வெற்றி பெற்று தொடரை ஏற்கனவே கைப்பற்றிவிட்டது. இரு அணிக ளுக்கும் இடையிலான 3ஆவது டெஸ்ட் போட்டி ஹாமில்டனில் நடைபெற்று வருகிறது. நியூசிலாந்து அணி முதல் இன்னிங்ஸில் 347 ஓட்டங்கள் சேர்த்தது. இங்கிலாந்து அணி 143 ஓட்டங்களுக்கு சுருண்டது. இந்த நிலையில் இரண்டாவது இன்னிங்ஸில் கேன் வில்லியம்சனின் அதிரடி ஆட்டம் மூலம் 453 ஓட்டங்களைக் குவித்தது நியூசிலாந்து. வில்லியம் சன் 156 ஓட்டங்கள் எடுத்தார். முதல் இன்னிங்ஸில் பெற்ற முன்னிலையுடன் இங்கிலாந்து அணிக்கு 659 ஓட்டங்களை நியூசிலாந்து அணி வெற்றி இலக்காக நிர்ணயித்துள்ளது.




நேற்றைய ஆட்டநேர முடிவில் இங்கிலாந்து 18 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்கள் இழந்திருந்தது. இந்தப் போட்டியில் வெற்றி பெற அந்த அணி [illegible] 640 ஓட்டங்களை பெற [illegible] என்ற இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீனவர்கள்...

மின்சார இணைப்பு மற்றும் பெற்றோலிய குழாய்களை நிறுவுவதன் மூலம் ஆற்றல் உறவுகளை அதிகரிக்க முடிவு செய்துள்ளன.

பரந்த அளவிலான பேச்சுவார்த்தையில் இந்த முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்தியா - இலங்கை பொருளாதார கூட்டாண்மையை வலுப்படுத்த இரு தரப்பும் முடிவு செய்துள்ளன. டிஜிட்டல் மற்றும் எரிசக்தி இணைப்பு ஆகியவை ஒத்துழைப்பின் முக்கிய தூண்களாக இருக்கும். மின்சாரம் இணைப்பு மற்றும் பெட்ரோலிய குழாய்களை நிறுவுவதற்கான பணிகள் மேற்கொள்ளப்படும். இலங்கையின் மின் உற்பத்தி நிலையங்களுக்கு திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயுவை இந்தியா வழங்கும்.

இரு நாடுகளுக்கு இடையேயான தொடர்பை மேம்படுத்தும் வகையில் ராமேஸ்வரம் மற்றும் தலைமன்னார் இடையே படகு சேவை தொடங்கப்படும். எங்கள் பாதுகாப்பு நலன்கள் ஒன்றோடொன்று இணைந்திருப்பதை நாங்கள் இருவரும் ஒப்புக்கொள்கிறோம். பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தத்தை விரைவில் முடிக்க முடிவு செய்துள்ளோம்.

மீனவர்களின் வாழ்வாதாரம் தொடர்பான பிரச்னைகள் குறித்தும் நாங்கள் விவாதித்தோம். இந்த விஷயத்தில் மனிதாபிமான அணுகுமுறையுடன் தொடர வேண்டும் என்பதை ஒப்புக்கொள்கிறோம். இலங்கையில் உள்ள தமிழ் சமூகத்தின் விருப்பங்களை இலங்கை அரசாங்கம் நிறைவேற்றும் என்று இந்தியா நம்புகிறது.

இந்தியா இதுவரை இலங்கைக்கு 5 பில்லியன் டாலர் கடன் மற்றும் மானிய உதவிகளை வழங்கியுள்ளது. இலங்கையின் 25 மாவட்டங்களிலும் இந்தியாவுக்கு ஒத்துழைப்பு உள்ளது. இந்தியாவின் திட்டங்களின் தேர்வு எப்போதும் அண்டை நாடுகளுக்கு முன்னுரிமை என்பதை அடிப்படையாகக் கொண்டது" என்று தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க,

"இலங்கை ஜனாதிபதியான பிறகு, இது எனது முதல் வெளிநாட்டு பயணம். டில்லிக்கு வர முடிந்ததில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். எனக்கு வழங்கப்பட்ட அழைப்பிற்காகவும், நான் உட்பட ஒட்டுமொத்த தூதுக் குழுவிற்கும் அளிக்கப்பட்ட அன்பான விருந்தோம்பலுக்காகவும் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பு மேலும் மேம்பட வேண்டும்.

இரு நாடுகளுக்கும் தொல்லையாக மாறியுள்ள மீனவர் பிரச்னைக்கு நீடித்த மற்றும் நிலையான தீர்வை காண விரும்புகிறோம். அந்த பகுதியில்(இலங்கையை ஒட்டிய இந்திய பகுதியில்) இழுவை படகுகள் மூலம் மீன்கள் பிடிக்கப்படுகின்றன. அந்தப் பகுதியில் உள்ள மீனவர்கள் இதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். ஏனெனில், அது இந்தத் தொழிலுக்கு அழிவை ஏற்படுத்தும்.

பொது சேவைகளை டிஜிற்றல் மயமாக்குவதில் இந்தியா மகத்தான வெற்றியைப் பெற்றுள்ளது. எனவே, இலங்கையும் அதே பாதையில் செல்கிறது. இவ்விஷயத்தில் ஆதரவளிப்பதாக பிரதமர் மோடி எனக்கு உறுதியளித்துள்ளார். கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு வரலாறு காணாத பொருளாதார நெருக்கடியை நாங்கள் சந்தித்தோம். அந்த புதைகுழியில் இருந்து வெளிவர இந்தியா எங்களுக்கு பெரிதும் உதவியது. இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையில் இலங்கை மிக முக்கியமான இடத்தைப் பெறுகிறது என்பதை நான் அறிவேன்.

சமூக பாதுகாப்பு மற்றும் நீடித்த வளர்ச்சி ஆகியவை நம் நாட்டு மக்கள் எங்கள் இரு தரப்பையும் அதிகாரத்திற்குத் தேர்ந்தெடுத்ததற்கான அடிப்படைக் காரணங்கள். சமீபத்தில் முடிவடைந்த அதிபர் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலில் இது போன்ற ஒரு வரலாற்று வெற்றியை நாங்கள் பெற்றதில்லை. இலங்கை மக்களால் வெளிப்படுத்தப்பட்ட செய்தி, இலங்கையில் ஒரு புதிய கலாச்சாரம் உருவாக வழிவகுத்தது. நாட்டின் அனைத்து பகுதிகளிலும் உள்ள மக்கள், அனைத்து சமூகங்களை யும், சமயங்களையும் சேர்ந்தவர்கள் எங்கள் மீது நம்பிக்கை வைத்துள்ளனர்" என தெரிவித்தார்.

இதையடுத்து வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில், "இரு தரப்பு மீனவர்களும் எதிர்கொள்ளும் பிரச்னைகளை ஏற்றுக்கொண்டு, வாழ்வாதார பிரச்னைகளை காரணியாகக் கொண்டு, மனிதாபிமான முறையில் இவற்றைத் தொடர்ந்து தீர்க்க வேண்டியதன் அவசியத்தை தலைவர்கள் ஒப்புக் கொண்டனர். ஆக்ரோஷமான நடத்தை அல்லது வன்முறையைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியத்தை அவர்கள் வலியுறுத்தினர். அண்மையில் கொழும்பில் நடைபெற்ற 6வது கூட்டுச் செயற்குழுக் கூட்டத்தை அவர்கள் வரவேற்றனர்.

பேச்சுவார்த்தை மற்றும் ஆக்கபூர்வமான செயல்பாடுகள் மூலம் நீண்ட கால மற்றும் பரஸ்பரம் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வை எட்ட முடியும் என்ற நம்பிக்கையில், இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே உள்ள சிறப்பான உறவைக் கருத்தில் கொண்டு, இந்தப் பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பதில் தொடர்ந்து ஈடுபடுமாறு அதிகாரிகளுக்கு அவர்கள் அறிவுறுத்தினர்" என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## வவுனியாவிலும்...

மேலதிக சிகிச்சைக்காக அவர் யாழ் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

அங்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் அவருக்கு எலி காய்ச்சல் தொற்று இருப்பது கண்டு பிடிக்கப்பட்டதுடன், அவருக்கு அங்கு மேலதிக சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது.

## ஜெய்சங்கர்...

ஒத்துழைப்புக்களை பலப்படுத்திக் கொள்ளல் மற்றும் இருநாடுகளுக்கும் இடையிலான முதலீட்டு வாய்ப் புக்களை விரிவுபடுத்திக்கொள்வது தொடர்பில் அமைச்சர் நிர்மலா சீதாராமன் உடனான சந்திப்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

அதேநேரம் இந்திய சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு அதிகளவில் அழைத்து வருவது மற்றும் இலங்கையின் விவசாய நவீனமயமாக்கல், டிஜிற்றல் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர் உடனான சந்திப்பு சிநேகபூர்வமாக இடம்பெற்றதோடு, இலங்கையின் பொருளாதார மறுமலர்ச்சிக்கு இந்தியாவின் மிகப் பெரிய சந்தையை பயன்படுத்திக் கொள்வது குறித்தும் அதில் கவனம் செலுத்தப்பட்டது.

மேலும், இந்நாட்டின் சுற்றுலா, முதலீடு மற்றும் வலுசக்தி துறைகளில் ஒத்துழைப்பு வழங்குவற்கும் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர் இதன்போது இணக் கம் தெரிவித்தார்.

மீன்பிடித்துறை மற்றும் தேசிய ஒற்றுமை மேம்பாடு உள்ளிட்ட இரு நாடுகளுக்கும் அன்னியோன்ய மான விடயங்கள் குறித்தும் இதன் போது கவனம் செலுத்தப்பட்டது.

அதனையடுத்து இந்திய பாது காப்பு ஆலோசகர் அஜித் டோவால், வலயத்தின் பாதுகாப்பு குறித்து கலந்துரையாடினார்.

இந்த சந்திப்புகளில் அமைச்சர்களான விஜித ஹேரத், பேராசிரியர் அனில் ஜயந்த பெர்னாண்டோ உள்ளிட்டோரும் இணைந்து கொண்டனர். (அ)

## இலங்கையில்...

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மூன்றுநாள் அரசுமுறை பயணமாக ஞாயிற்றுக்கிழமை இந்திய தலைநகர் புதுடில்லிக்குச் சென்றார். இந்தப் பயணத்தில் இந்திய ஜனாதிபதி திரௌபதி முர்மு, பிரதமர் நரேந்திர மோடி, வெளிவிவகார அமைச்சர் சுப்ரமணியம் ஜெய்சங்கர் உட்பட பல்வேறு தரப்பினரை அவர் சந்தித்து கலந்துரையாடினார்.

நேற்று திங்கட்கிழமை பிரதமர் மோடியுடன் இருதரப்பு சந்திப்பை ஜனாதிபதி அநுரகுமார நடத்தியிருந்தார். இந்த சந்திப்பில் பேசப்பட்ட விடயங்கள் தொடர்பில் இந்திய வெளியுறவு அமைச்சின் செயலாளர் விக்ரம் மிஸ்ரி நேற்று மாலை புதுடில்லியில் ஊடகங்களுக்கு தெளிவுபடுத்தி னார்.

இதன்போது 13ஆவது திருத்தச்சட்டம் மற்றும் மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் இருவருக்கும் இடையில் பேசப்பட்டதா என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதில் அளித்த வெளியுறவு அமைச்சின் செயலாளர் விக்ரம் மிஸ்ரி,

தமிழ் மக்களுக்கான தீர்வு தொடர்பில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க பல சந்தர்ப்பங்களில் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள் ளார். குறிப்பாக தேர்தல் காலங்களில் அவர் இதுகுறித்து கூறியிருந்தார். வடக்கு, கிழக்கு உட்பட பல பகுதிகளில அவருக்கு ஆதரவு கிடைக்கப்பெற்றது.

தமிழ் மக்கள் தொர்பிலான விவகாரம் நீண்டகாலமாக பேசப்படும் பிரச்சினை. இருதரப்பு பேச்சுகளில் இந்த விடயங்கள் தொடர்பில் சில விடயங்களில் பேசப்பட்டது. மாகாண சபைத் தேர்தலை நடத்துவதன் அவசியத்தை பிரதமர் மோடி ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவிடம் எடுத்துரைத்ததுடன், இன ஐக்கிய மற்றும் உண்மையான நீதிக்கு மாகாணகளின் அவசியம் தொடர்பிலும் பேசப்பட்டது." என்றார். (அ)

## பஸ்ஸில்...

பின்னர் தனியார் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு, அங்கிருந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். இருப்பினும் அவர் உயிரிழந்து விட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். மாரடைப்பு காரணமாக மரணம் சம்பவித்துள்ளதாக பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## 85பேருக்கு...

சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கடந்த 24 மணிநேரத்தில் புதிதாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு 9 நோயாளர்களும் யாழ் போதனா வைத்தியசாலைக்கு 4 நோயாளர்களும் எலிக்காய்ச்சலுடன் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு யாழ். போதனா வைத்தியசாலையில் கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் துன்னாலை கிராமத்தைச் சேர்ந்த 23 வயதான இளைஞர் ஒருவர் எலிக்காய்ச்சல் நோய் காரணமாக உயிரிழந்துள்ளார். இத்துடன் இதுவரை யாழ்.மாவட்டத்தில் எலிக்காய்ச்சல் காரணமாக 7 இறப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

எலிக்காய்ச்சல் என சந்தேகிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டிருந்த நோயாளர்களின் குருதி மாதிரிகள் கொழும்பு மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்துக்கும், கண்டி தேசிய வைத்தியசாலைக்கும்

அனுப்பப்பட்டிருந்தன. இவர்களில் 7 பேருக்கு எலிக்காய்ச்சல் தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் உயிரிழந்த கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்த இளைஞருக்கும் எலிக்காய்ச்சல் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்றார். (அ)

## யாழில் திடீர் சுகவீனத்தால் குடும்ப பெண் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், டிசெ. 17

தெல்லிப்பழையில் திடீர் சுகவீனம் ஏற்பட்ட குடும்பப் பெண்ணொருவர் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

மாவைகலட்டி, தெல்லிப்பழை பகுதியைச் சேர்ந்த 44 வயதான மூன்று பிள்ளைகளின் தாயே இவ்வாறு உயிரிழந்துள்ளார். குறித்த பெண்ணுக்கும் அவரது குழந்தைக்கும் உடல் சுகயீனம் ஏற்பட்ட நிலையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை சிகிச்சைக்காக அளவெட்டி வைத்தியசாலைக்கு சென்று மருந்து எடுத்துக்கொண்டு வீடு திரும்பியுள்ளார்.

வீடு சென்ற பெண்ணுக்கு மீண்டும் சுகயீனம் ஏற்பட்ட நிலையில் மயக்கமுற்றுள்ளார். அவரை தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு சென்றவேளை அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். மரணத்திற்கான காரணம் தெரியவராத நிலையில் உடற்கூற்று மாதிரிகள் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (அ-5)

## இலங்கை...

இந்த கலந்துரையாடலின்போது இருவரும் எதிர்காலத்தில் இருநாடுகளுக்கும் இடையில் வர்த்தக நடவடிக்கைகள் மேற்கொள்ளும் போது இரு நாட்டு நாணயங்களையும் பயன்படுத்துவது குறித்து ஆலோசித்துள்ளனர். (அ)

## இலங்கை வருமாறு...

அதனைத் தொடர்ந்து, இந்தியாவின் வெளிவிவகாரக் கொள்கையில் இலங்கைக்கு விசேடமான இடமுள்ளது என்பதை தாம் நன்கு அறிவதாக கூட்டுச் செய்தியாளர் சந்திப்பில் ஜனாதிபதி அநுரகுமார நினைவு கூர்ந்தார்.

இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அழைப்பு விடுத்தார். (அ)

## இந்தியாவின்...

பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லமான ஹைதராபாத் மாளிகையில் நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து, இரட்டை வரி விதிப்பைத் தடுப்பது மற்றும் அரசு அதிகாரிகளின் திறன் மேம்பாடு குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் இந்திய - இலங்கை தலைவர்கள் முன்னிலையில் கைச்சாத்திடப்பட்டன.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தனது முதலாவது வெளிநாட்டு விஜயத்திற்காக இந்தியாவை தெரிவு செய்தமை தொடர்பில் தாம் மகிழ்ச்சியடைவதாக இந்திய பிரதமர் நரேந்திர மோடி இதன் போது தெரிவித்தார்.

இந்திய அபிவிருத்தி ஒத்துழைப்பை தொடர்ந்து முன்னெடுக்கும் வகையில், அநுராதபுரம் ரயில் பாதை சமிக்ஞைக் கட்டமைப்பு மற்றும் காங்கேசன்துறை துறைமுக புனரமைப்பு என்பவற்றுக்கு உதவி வழங்குவது தொடர்பிலும் இதன் போது நீண்ட கலந்துரையாடல் இடம் பெற்றது.

இந்திய கல்வி ஒத்துழைப்பின் கீழ் அடுத்த வருடம் முதல் யாழ்ப்பாணம் மற்றும் கிழக்கு மாகாண பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த 200 மாணவர்களுக்கு மாதாந்த புலமைப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. அடுத்த ஐந்து வருடங்களில் 1500 இலங்கை அரச ஊழியர்களுக்கு இந்தியாவில் பயிற்சி அளிக்க இந்தியப் பிரதமர் உடன்பாடு தெரிவித்தார்.

இந்தியாவின் பாதுகாப்புக்கும் பிராந்தியத்தின் ஸ்திரத்தன்மைக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் இலங்கை மண்ணை பயன்படுத்த ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை என ஜனாதிபதி அநுரகுமார இங்கு தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# வடக்கில் உள்ள தொல்லியல் மையங்களின் உரிமை குறித்து தொடர்ந்தும் இழுபறிநிலை!

கொழும்பு, டிசெ. 17

**வடக்கு மாகாணத்தில் அடையாளம் காணப்பட்ட 479 தொல்பொருள் தளங்களில் 252 இடங்களின் உரிமை இன்னும் தீர்க்கப்படாமல் உள்ளதாக தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் அண்மைய அறிக்கையின்படி, தெரிவிக்கப்பட்டுள்ளது.**

2023, ஜூலை வரை, இந்த தளங்கள் முறையாக கையகப்படுத்தப்படவில்லை, அத்துடன் அவற்றின் எல்லைப் பதிவுகள் இன்னும் நிறுவப்படவில்லை. அதேநேரம், அவற்றின் பாதுகாப்புக்காக வர்த்தமானி அறிவிப்புகள் எதுவும் வெளியிடப்படவில்லை.

முன்னதாக, வடக்கு மாகாணத்தில் பிராந்திய தொல்லியல் அலுவலகங்கள் அமைக்கப்பட்டு, 2018ஆம் ஆண்டு இடங்களை ஆய்வு செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

எனினும், முறையான வர்த்தமானியின்மை காரணமாக பல இடங்கள் பாதுகாப்பற்ற நிலையில் உள்ளன.

குறிப்பாக, நாகதம்பிரான், வவுனிக்குளம், சிவபுரம் ஸ்ரீ மலை ஆலயம் ஆகிய இடங்களில் உள்ள பல குறிப்பிடத்தக்க தொல்பொருள் இடங்கள் சேதப்படுத்தப்பட்டுள்ளமையும் கண்டறியப்பட்டுள்ளது.

நெடுங்கேணி சிவநகர், குளமுறிப்பு, கொடியமலை போன்ற இடங்களிலும் இதுபோன்ற சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

மேலும், வெடுக்குநாறிமலை, நெளுக்குளம், சமலங்குளம் போன்ற முக்கிய இடங்கள், 2008ஆம் ஆண்டிலேயே பாதுகாக்கப்பட்ட நினைவுச்சின்னங்களாக அறிவிக்கப்பட்ட போதிலும், இன்னும் எல்லை நிர்ணயம் செய்யப்படவில்லை அல்லது வர்த்தமானியில் வெளியிடப்படவில்லை.

வடக்கு மாகாணத்தில் உள்ள பெரும்பாலான தொல்பொருள் தளங்களில் பூர்வாங்க அகழ்வாராய்ச்சிகள் மட்டுமே மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும், விரிவான ஆய்வுகள் எதுவும் நடத்தப்படவில்லை என்றும் கணக்காய்வில் தெரிய வந்துள்ளது. (அ)

# கருநாட்டுகேணிப் பகுதியில் குடும்பஸ்தர் அடித்து கொலை

முல்லைத்தீவு, டிசெ. 17

முல்லைத்தீவு கொக்கிளாய் கருநாட்டுகேணிப் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் அடித்து கொலை செய்யப்பட்ட சம்பவம் நேற்று முன் தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

கண்டி மற்றும் நுவரெலியா பகுதியில் இருந்து தொழில் நிமித்தம் வந்த இருவர் கருநாட்டுகேணிப் பகுதில் வாடியில் தங்கியிருந்துள்ளார்கள்.

குறித்த இருவரும் மதுபோதையில் வாய்த்தகராறில் ஈடுபட்டனர். அது பின்னர் கைகலப்பாக மாறிய நிலையில் ஒருவர் உயிரிழந்தார்.

தொடர்ந்து சம்பவ இடத்துக்கு விரைந்த கொக்குளாய் பொலிஸார் உயிரிழந்த நபரை வைத்தியசாலைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர்.

குறித்த சம்பவத்தில் கண்டியைச் சேர்ந்த சுந்தரராஜ் எனும் 38 வயதுடைய நபரே கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில் மஸ்கெலிய பிரதேசத்தை சேர்ந்த 42 வயதுடைய நபர் கைது செய்யப்பட்டுள்ளார்

சம்பவம் தொடர்பான விசாரணைகளை கொக்குளாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# மணல் கடத்தலுக்குப் பொலிஸாரும் பாதுகாப்பு படையினருமே பொறுப்பு

## பிரதி அமைச்சர் சுட்டிக்காட்டு

கொழும்பு, டிசெ. 17

பொலனறுவை மாதுரு ஓயா தென்கரையில் இடம்பெறும் பாரிய மணல் கடத்தலுக்கு இலங்கை மகாவலி அதிகார சபையின் பாதுகாப்புப் படையினரும் பொலிஸாருமே முழுப் பொறுப்பு என தேசிய மக்கள் சக்தியின் பொலனறுவை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் வீடமைப்பு அபிவிருத்தி பிரதி அமைச்சருமான டி.பி.சரத் தெரிவித்துள்ளார்.

இராணுவத்தினரால்கூட கடத்தலை தடுக்க முடியாத நிலையில் மாதுரு ஓயா மணல் கடத்தல்காரர்களை கைதுசெய்து சட்டத்தை அமுல்படுத்த பொலிஸார் தயக்கம் காட்டினால், குறித்த பொலிஸ் அதிகாரிகள் அனைவரையும் ஜனவரி மாதம் முதல் இடமாற்றம் செய்ய தயங்கமாட்டோம் என அவர் தெரிவித்துள்ளார்.

பொலனறுவை மாவட்டத்தில் கஞ்சா, ஹெரோயின், ஐஸ் போதைப் பொருள் மற்றும் கடத்தல் களை ஒடுக்குவதற்கு பொலிசார் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும்,

போதைப்பொருளில் ஈடுபடும் தம் தரப்பினர் யாரேனும் இருந்தால் அவர்களைக் கைது செய்வதில் எந்தத் தடையும் இல்லை எனவும் பிரதியமைச்சர் கோரியுள்ளார்.

குற்றவாளிகளை கைது செய்து சட்டத்தை அமுல்படுத்த முடியாத அதிகாரிகள் இருந்தால் அதுபற்றி அவருக்கு தெரிவிக்க வேண்டும் என்றும், அந்த அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டு சட்ட அமுலாக்க அதிகாரிகள் பணியில் ஈடுபடுத்தப்படுவார்கள் என்றும் பிரதியமைச்சர் தெரிவித்தார். (அ)

# 225 பாராளுமன்ற உறுப்பினர்களின் தகைமை கோரும் ஆஷு மாரசிங்க



கொழும்பு, டிசெ. 17

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஆஷு மாரசிங்க, இம்முறை பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்ட 225 பாராளுமன்ற உறுப்பினர்களின் கல்வித் தகைமைகள், தொழில் மற்றும் சொத்து அறிக்கைகளை கோரி தகவல் அறியும் சட்டத்தின் கீழ் மூன்று விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளார்.

இலங்கை பாராளுமன்றத்தில் பொதுச்செயலாளர், ஊழல் மற்றும் மோசடி விசாரணை ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆகியோரிடம் ஆஷு மாரசிங்க இந்த தகவல்களை கோரியுள்ளார்.

2024 பாராளுமன்றத் தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட 225 பாராளுமன்ற உறுப்பினர்களின் கல்வித் தகைமை, வேலை வாய்ப்பு மற்றும் சொத்துப் பொறுப்பு அறிக்கைகளை வழங்க வேண்டும் என தகவல் அறியும் சட்டத்தின் கீழ் ஆஷுமாரசிங்கவினால் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# தகுதியான ஒருவரை எதிர்க்கட்சி சபாநாயகராக்க ஆதரவளிப்போம்!

## கூறுகிறது பொதுஜன பெரமுன

கொழும்பு, டிசெ. 17

எதிர்க்கட்சி தகுதியான ஒருவரின் பெயரை சபாநாயகராக முன்மொழியும் பட்சத்தில் அதற்கான ஆதரவை வழங்க தயாராகவுள்ளதாக பொதுஜன பெரமுன பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

கொழும்பிலில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

முன்னாள் சபாநாயகர் அசோக ரன்வெல பதவியை இராஜினாமா செய்தமை வரவேற்கத்தக்க விடயமாகும். இருப்பினும் தேசிய மக்கள் சக்தியினர் புதிய அரசியல் கலாச்சாரத்தை உருவாக்குவதாக கூறிக்கொண்டே ஆட்சிக்கு வந்தனர்.

ஊழல்வாதிகள் பொய்யுரைப்பவர்களுக்கு அவர்களின் அரசாங்கத்தில் இடமில்லை என கூறிக் கொண்டே ஆட்சிக்கு வந்தனர். அவர்கள் நாட்டு மக்களுக்கு பாரிய வாக்குறுதிகள் பலவற்றையும் வழங்கினர். ஆகவே அத்தகைய கட்சிக்குள் போலியான கல்வி சான்றிதழை சமர்ப்பிக்கும் ஒருவருக்கு இடமில்லை என்றே கூற முடியும்.

நாட்டு மக்களுக்கு அவர்கள் அளித்த வாக்குறுதிகளை அவ்வாறாகவே நிறைவேற்றுவார்கள் ஆயின் அது சிறந்த விடயமாக அமையும். எம்முடைய கட்சி சார்பில் மூவரே பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்றனர். இத்தகைய பின்னணியில் பிரதான எதிர்க்கட்சி தகுதியான ஒருவரை சபாநாயகர் பதவிக்கு முன்மொழியும் பட்சத்தில் அவர்களுக்கு ஆதரவு வழங்க தயாராகவுள்ளோம் - என்றார். (அ)

# நீதி அமைச்சர் ஹர்ஷன சி.ஐ.டியில் முறைப்பாடு!



கொழும்பு, டிசெ. 17

நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார, தனது கல்வித் தகைமை தொடர்பில் பிழையான தரவுகள் பாராளுமன்ற தரவுத்தளத்தில் பதிவு செய்யப்பட்டமை தொடர்பில் விசாரணை நடத்துமாறு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் நேற்று முறைப்பாடு செய்துள்ளார்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட நீதி அமைச்சர்,

நான் ஒரு சட்டத்தரணி. 25 வருடங்கள் அத்துறையில் இருக்கின்றேன். எனவே, எனது பெயருக்கு முன்னால் நான் ஒருபோதும் கலாநிதி பட்டத்தை பயன்படுத்தியது கிடையாது.

எனது பெயருக்கு முன்னால் கலாநிதி பட்டம் பயன்படுத்தப்பட்டமை தொடர்பில் பாராளுமன்ற தகவல் திணைக்களம் மன்னிப்பு கோரியுள்ளது.

எனினும், எனது பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் விதத்தில் தவறான தகவல் உள்ளடக்கப்பட்டதா என்பது பற்றி விசாரிக்குமாறு கோரியே முறைப்பாடு செய்துள்ளேன் - என்றார். (அ)

# புதிய சபாநாயகராக ஜகத் விக்கிரமரத்ன!

கொழும்பு, டிசெ. 17

10 ஆவது பாராளுமன்றத்தின் புதிய சபாநாயகராக தமது கட்சியின் பொலனறுவை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வைத்தியர் ஜகத் விக்கிரமரத்னவை நியமிப்பதற்கு தேசிய மக்கள் சக்தி திட்டமிட்டுள்ளது.

பொதுத்தேர்தலில் பொலனறுவை மாவட்டத்தில் விருப்பு வாக்கு பட்டியலில் இவர் இரண்டாம் இடத்தைப் பிடித்தார். 51, 391 வாக்குகளைப் பெற்றிருந்தார்.

புதிய சபாநாயகர் தெரிவு பாராளுமன்றத்தில் இன்று நடைபெறவுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியும் சபாநாயகர் வேட்பாளர் ஒருவரை முன்மொழியவுள்ளது.

அவ்வாறு நடந்தால் இரகசிய வாக்கெடுப்புமூலம் சபாநாயகர் தேர்வு இடம்பெறும். (அ)

# அர்ச்சுனாவுக்கு நேற்று எச்சரிக்கையுடன் பிணை!

யாழ்ப்பாணம், டிசெ. 17

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குள் புகுந்து குழப்பம் விளைவித்தார் என்ற குற்றச்சாட்டில் பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா கடுமையாக எச்சரிக்கப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டார்.

நேற்று அவரை யாழ்ப்பாணம் பொலிஸார் கைது செய்து, யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தினர்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குள் அத்துமீறி நுழைந்த வழக்கு தொடர்பான விசாரணை நேற்று யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்பட்டபோதே நீதிமன்றம் பிணை வழங்கியது.

யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தியால் இந்த வழக்கு தாக்கு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 17.12.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.